


# ரமணோதயம்

ஏப்ரல் 2021
காலாண்டு

ஆராதனை இதழ்
விலை ₹ 20



## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்

உதயம் 20 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 3

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஆராதனை இதழ்

ஏப்ரல் 2021

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20

ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:

ஆ. குமார் ராஜா: 9444261296

மின்னஞ்சல்: arunamramanam@gmail.com

மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:

ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்

41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4

தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஆராதனை இதழ், ஏப்ரல் 2021


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | யதார்த்தம் சொல்பவர் குரு | பிர. கிரிதர ஜெகதீஷ் | 16 |
| 3 | ஔவைக் குறள் | ராம் மோஹன் | 25 |
| 4 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 36 |
| 5 | எண்ணில் அடங்குபவன் | ஏ.வி. ராஜகோபாலன் | 43 |
| 6 | முருகனார் நோக்கில் முழுமுதற் கடவுள் | ரமணசுந்தர்ராஜன் | 54 |
| 7 | சப்ரிஜிஸ்திரார் நாராயண ஐயர் (நிறைவுப்பகுதி) | வி. நிரஞ்சன் | 61 |
| | ஆதிசிவன் தாள்பணிந்து | சியாம் சங்கர் | 69 |
| 8 | ரமண மையங்களை நோக்கி... | | 70 |
| 9 | இனிவரும் திருநாட்கள் | | 76 |
| 10 | செய்திகள் | | 77 |

# ஆசிரியர் உரை

## நிகழ்வு ஒன்றே நிலை

பகவான் தம்மிடம் வருவோர்க்கு மிக எளிய முறையில் அடிப்படைத் தத்துவங்களை உபதேசிப்பார். ஒருநாள் அன்பர் குழுமியிருந்த ஞானசபையில் பற்றற்ற நிலையின் உயர்வு குறித்து பகவான் சில கருத்துக்களைக் கூறினார். தெலுங்கு இலக்கியங்களைக் கசடறக் கற்ற சூரிநாகம்மா, தெலுங்கில் போத்தன்னா பாகவதத்தில் ஆசைகளை அடியோடு நீக்கிய நிலைபற்றிய பாடல் ஒன்றைக் கூறி, அதன் பொருளையும் விளக்கினார். அந்தப் பாடல் கூறுவதாவது:

"படுக்கவும் உடுக்கவும் உண்ணவும் இயற்கையே மனமுவந்து எளிதாகத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. ஏன் மனிதர்கள் பெரும் பொருளைச் செலவிட்டு வசதிகளைப் பெருக்கிக் கொள்ள விரும்புகிறான்? இல்லத்தரசிகள் பிட்சையிடத் தயாராய் இருக்கும்போது செருக்கு நிரம்பிய செல்வந்தர்களிடம் சேவகம் செய்ய விரும்புவது ஏன்?"

இதை உன்னிப்பாய்க் கேட்ட பகவான், இதன் தத்துவத்தை விளக்கிக் கூறலானார். முன்னர், தான் வானமே கூரையாய், தரையே படுக்கையாய்க்கொண்டு எளிமையாய் வாழ்ந்திருந்ததைக் குறிப்பிட்டு, பின்னர் ஆச்ரமத்தில் வந்து சேர்ந்த, கட்டில்கள், ஆசனங்கள் எல்லாம் அடிமைத்தளைகள் என்று குறிப்பிட்டார்.

ஒருசமயம் பம்பாய் நகரில் வீட்டு வசதிக்கான உபகரணங்கள் கண்காட்சி – அரைவை இயந்திரங்கள்,

*விசிறிகள், மின்சார சமையல் உபகரணங்கள் கொண்டது – நடைபெற்றது. ஜம்னாலால் பஜாஜ் அவர்களால் நடத்தப்பட்ட அக்கண்காட்சியைக் காண மஹாத்மா காந்தியை, பஜாஜ் அழைத்திருந்தார். அங்கிருந்த உபகரணங்கள் அனைத்தையும் பெருமிதத்துடன் மஹாத்மாவுக்குக் காண்பித்தார். இறுதியில் பார்வையாளர் புத்தகத்தில் தமது கருத்தை எழுதுமாறு பஜாஜ் மஹாத்மாவை வேண்டினார். மஹாத்மா அந்தப் புத்தகத்தில் "Only after coming to the exhibition, I have come to know how many I can do without!" இங்கே வந்தபிறகும், எத்தனை உபகரணங்கள் இல்லாமல் நாம் வாழமுடியும் என்று தெரியவந்துள்ளது என்றார். நாம் சௌகரியத்திற்காக வைத்துக்கொள்ளும் அத்தனை உபகரணங்களும் நமக்கு உண்மையில் ஒரு சுமையே!*

*மேற்கண்ட இந்த உரையாடலின்போது பகவான் புத்தர்பிரானைப் பற்றிக் கூறத் தொடங்கினார்:*

*"புத்தர் அரண்மனை வசதிகளை எல்லாம் துறந்து, காடு சென்று தவத்தோரின் எளிய வாழ்க்கையை வாழ்ந்தார் அல்லவா? இது அவரது தந்தை சுத்தோதனருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. சுகபோக வாழ்க்கையை ஏதோ ஓர் உத்வேகத்தில் துறந்து சென்ற மகன், ஏக்கத்தில் ஆழ்ந்திருப்பான் என்று தந்தை எதிர்பார்த்தார். ஆனால் புத்தரைச் சென்று பார்த்து வந்த அனைவருமே 'அவர் எல்லையற்ற ஆனந்தத்தில் திளைக்கின்றார்' என்று சுத்தோதனரிடம் கூறினர். சுத்தோதனரால் அதை நம்பவே முடியவில்லை.*

*"ஒருநாள் புத்தர் நாட்டின் தலைநகருக்கு வந்தார். ஒரு பிச்சைக்காரன்போல் வந்த புத்தரைத் தந்தையால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. புத்தரின் மனைவி யசோதரா மட்டுமே அவரை மெய்யாக அறிந்துகொண்டு, தாயும் மகன் ராஹுலனுமாக அவரை வணங்கினர். அதன் பின்னர்தான் சுத்தோதனருக்கு*

வந்தது யார் என்று தெரிந்தது. சினம் பொங்கி வந்தது. 'ஏன் இந்த முட்டாள்தனம் சித்தார்த்தா? இந்தப் பேரரசின் வசதிகள் அனைத்தும் உன் காலடியில் இருக்க, இதை எல்லாம் உதறித் தள்ளி, பிச்சைக்காரனாகத் திரிகிறாயே!' என்று கடிந்துகொண்டார். புத்தர் பதில் ஏதும் கூறாமல் தன் அருள் விழியால் அரசரை இடையறாது நோக்கினார். [பகவான் அருட்பார்வை பட்ட அடியார்தம் அனுபவம்போல்] புத்தர்பிரான் அருட்பார்வை பட்டவுடன், சுத்தோதனர் உள்ளத்தில் ஒரு மடைமாற்றம் நிகழ்ந்தது. சுத்தோதனரும் ஆசைத் தளைகளை அறுத்து எறிந்து துறவியானார். பற்றறுத்த பேரின்பத்தை அனுபவிக்கத் தொடங்கினார்" என்று விளக்கினார் பகவான்.

மஹாராஷ்டிரத்தில் இருந்துவந்த ஓர் அன்பர், பகவானிடம் விளக்கம் கேட்டு வினவினார். அவரது ஐயம் ஆசைகளால் சஞ்சலிக்கும் மனத்தை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பது பற்றியதாம். பகவான் அவருக்கு பகவத் கீதை ஆறாம் அத்யாயத்தில் உள்ள சுலோகங்களைக் கூறி விளக்கினார். அங்ஙனம் பகவான் உரைத்த சுலோகங்களில் சிறப்பான ஒன்று:

**யதோ யதோ நிஶ்சரதி மனஶ்சஞ்சலமஸ்தி²ரம்**
**ததஸ்ததோ நியம்யைதத் ஆத்மந்யேவ வஶம்நயேத்**

**(கீதை 6:26)**

இதன் பொருள்:

"மனம் இயல்பாக சஞ்சலம் கொண்டது. ஓரிடத்தில் நிலைகொள்ளாது அசையும் தன்மையற்றது. தியானத்தின்போது மனம் கட்டுப்படாமல் அலைவதற்கு இதுவே காரணம். உலகப் பொருட்கள் மீது கொண்ட நீங்காத ஆசையினால் அவற்றை மனம் தேடி அலைகிறது. மனத்தைக் கட்டுப்படுத்தி ஆசைகளைக் கட்டுப்படுத்தல் எளிதன்று. ஆனால் படிப்படியாக ஆசைகளைக் குறைத்துக்கொண்டு மனதை விசாரத்தில்

*ஈடுபடுத்தி, ஆன்மாவில் ஒன்றும்படி செய்தால் ஓர் அற்புதம் நிகழ்கிறது."*

ஆன்ம நாட்டத்தில் ஈடுபடுவோர் பற்றற்று பேரின்ப நிலையை அடைவர் என்று படித்துள்ளோம். சிலநேரம் மனத்தை உலக விஷயங்களில் இருந்து திருப்பி ஆன்மாவில் ஈடுபடுத்தினால் அந்த ஆத்ம சாட்சாத்காரத்தின் நிகரற்ற சுவையை மனம் சிறிது அடைந்து விடுகிறது. இதனால் மனதைத் தொடர்ந்து ஈடுபடுத்தும் ஆர்வம் மிகவாகி, அது படிப்படியாக எளிதாகிறது.

கல்கத்தாவில் நான் முதலில் சென்றபோது, என் நண்பர் 'வங்காள இனிப்புகள் புகழ்பெற்றவை' என்று கூறி, முதலில் ஒரு இனிப்பைத் தந்தார். சுவையால் ஈர்க்கப்பட்டு மறுநாளும் அதையே தருவார் என்று எதிர்பார்த்தேன். மறுநாளோ அவர் கல்கத்தாவின் மிகப் பிரசித்த பெற்ற ரஸகுல்லாவைத் தந்தார். அதன் இனிப்புச் சுவை, முந்தைய நாளைய இனிப்பை விடச் சிறப்பாக இருந்ததால், அதையே மீண்டும் சுவைக்க எண்ணினேன். ஆனால் அதற்கடுத்த நாட்களில் இனிப்புச் சுவை மிகுந்தவற்றைக் கொணர்ந்து கொடுத்தவர், இறுதியாக 'இதுதான் கல்கத்தாவின் மிக இனிப்பான உண்டி' என்று 'சம்சம்' எனப்படும் இனிப்பைத் தந்தார். அதைச் சாப்பிட்டபின், வேறு எந்த இனிப்பையும் நாடாமல் அதையே மீண்டும் மீண்டும் சுவைக்க மனம் நாடியது. அதுபோன்றே, தன்னைச் சரணடைந்த அடியார்க்கு இறைவன் தனது நிகரற்ற சுவையின் சிறிது பகுதியைத் தந்து, அதன் இணையற்ற சுவையை பக்தனை அனுபவிக்கச் செய்கிறான். அந்தச் சுவையை அனுபவித்தபின் இதுகாறும் அவன் உலக வாழ்க்கையில் 'சுவை' என்று அனுபவித்த எல்லாமே, அந்தப் பரம்பொருளின் நிகரற்ற சுவையின்முன் ஒன்றுமில்லாது ஆகிவிடுகின்றன.

*தன்னுடைய திருவருள் சுவையினைத் தருவதன் மூலம் இறைவன் பக்தன் தன்னைவிட்டு நீங்காமல் நிரந்தரமாகத் தன் அருட்சூழலிலேயே இருக்கும்படி அருள்புரிகிறான்.*

*இதனையே மணிவாசகர் கண்ட பத்தில் கூறுகிறார்:*

*உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்*
*கருத்துஇருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டு கொண்ட*
*திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை*
*அருத்தியினால் நாயடியேன் அணிகொள்தில்லை கண்டேனே*

*“தித்திக்கும் சிவபதம்” என்னும் சொல், எங்ஙனம் இறைவன் தனது அருளின் சிறுபகுதியை அடியானுக்கு ஈர்த்து அதன் ஈடுஇணையற்ற சுவையில் அவனை ஈடுபடுத்தி, அவனை நிரந்தரமாகத் தன்னுள் ஒன்றுபடச் செய்கிறான் என்பதைச் சுட்டுகிறது.*

*சாஸ்திர விதிகள் கடந்த அத்யாஸ்ரமியாகிய பகவான் செய்தது எல்லாம் சாஸ்திர சம்மதமாகவே அமைந்தன. எல்லார்க்கும் பொதுவான சாமான்ய தர்மத்தை எல்லோரும் பின்பற்ற வழிகாட்டி வாழ்ந்தவர் பகவான்.*

*இந்த சாமான்ய தர்மக் கொள்கைகள் என்னென்ன!*

*1. அஹிம்ஸை, 2. ஸத்யம், 3. ஆஸ்தேயம், 4. சௌசம், 5. இந்திரிய நிக்ரஹம்.*

*முதலாவதான அஹிம்ஸை அல்லது உயிரினத்தின் மீது கொண்ட பேரன்பினை வாழ்ந்து காட்டியவர் பகவான். திருவண்ணாமலை மீது ஆரம்ப நாட்களில் குகை வாஸம் செய்தபோதும், அங்கு அக்னி மலையின் அதி உஷ்ணத்தில் உடல் வாடிய புல்லறுக்கும் பெண்களின் முதுகில் குளிர்ந்த நீரை ஊற்றி உடலையும், உள்ளத்தையும் குளிர்வித்த பேரன்புப் பெருவெள்ளம் அல்லவா பகவான்! ‘அஹிம்ஸை’ என்ற சொல்லை, ‘ஹிம்ஸை தராமல் இருப்பது’ என்ற சிறுபொருளில் அடைக்காமல், ‘எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்*

*தம்முயிர்போல் உவக்கின்ற பெருநிலையில் வாழ்ந்து காட்டியவர் பகவான். அவரது பேரன்பு, சாதி, சமய, குல பேதமின்றி அகிலம் அனைத்தையும் அரவணைத்தது. வாய்பேசாது அண்ணாமலையார் கோயிலில் அமர்ந்திருந்த சிறுவன் ஆரம்பத்தில் ஏற்ற உணவு, ஆலய நடனமாது தந்த உணவு அல்லவா! காகம், நாய், குரங்குகள், மான்கள், மயில்கள் முதலிய சகல ஜீவராசிகளையும், அஃறிணையில் 'அது' என்று கூறாமல், தன்னுடைய நெருங்கிய உறவாய் எண்ணி, 'அவன்', 'அவள்' என்றே அழைத்தவர் பகவான். அவரது 'அன்பு' இதயம் அனைத்துடனும் ஒன்றாய் ஒலித்தது. இன்னும் உயிர்பெறாது முட்டையில் இருந்த கருவைக்கூட, தன் திருக்கரத்தால் அணைத்து அன்புகாட்டி உயிரூட்டியவர் பகவான். அவரது அன்பு உயிர் அசைவு காட்டும் விலங்குகள், பறவைகள் மட்டுமன்றி, ஜங்கம உயிர்கள் மட்டுமன்றி, அசைவாய்த் தாவரங்களையும் அரவணைத்தது.*

*கிருமிகீ டம்பறவை கேள்சதியே தாரு*
*உருமுதலா எல்லா உயிரும் – ஒருபோதும்*
*நாசமுறச் செய்யவொணா நல்லறிஞன் உண்மைஅறிவு*
*ஆசிரயித் தோனாய் அறி.*

*(ஞானாசார விசார படலம், 69)*

*வேறெதுவும் தான்பிடுங்க வேண்டாம் இலையினையும்*
*வேறுபடுத் துஞ்செயலும் வேண்டாமே – சீறி*
*இனாத செயவேண்டாம் எவ்வுயிர்க்கும்; பூவும்*
*அனாதரவாய்க் கிள்ளவேண் டாம்.*

*(ஞானாசார விசார படலம், 70)*

*என்று அஹிம்ஸை மற்றும் அகிலம் தழுவிய அன்பை வரையறுத்துக் காட்டுகிறார் பகவான்.*

*இரண்டாவதான சத்யம் என்பது பொய் சொல்லாமல் உண்மையைச் சொல்வது மட்டுமல்ல, அனைத்தும் வேரான 'பிரம்மம் ஸத்யம், ஜகத் மித்யா'.*

*நாம் காணும் அனைத்திலும் ஊடுருவி, படிப்படியாய் அதிஷ்டானமாய் இலங்கும் பிரம்மம் ஒன்றே ஸத்யம். மற்றெல்லாம் மித்யா ஆகிய பொய்ம்மையே என்ற பேருண்மையை வாழ்ந்து விளக்கியவர் பகவான். இதை பகவான் தெளிவுறத் தன் பல்வேறு உபதேசப் பாக்களில் விளக்கி உள்ளார். உதாரணமாக உள்ளது நாற்பது 13ஆவது பாடலில் பகவான் கூறுகிறார்:*

***ஞானமாந் தானேமெய்; நானாவாம் ஞானம்அஞ்***
***ஞானமாம் பொய்யாம்அஞ் ஞானமுமே – ஞானமாம்***
***தன்னைஅன்றி இன்றுஅணிகள் தாம்பலவும் பொய்மெய்யாம்***
***பொன்னையன்றி உண்டோ புகல்.***

*ஞானம், அஞ்ஞானம், பொய்-மெய் என்னும் இரண்டு தத்துவங்களைக் கொண்டு பகவான் விளையாடும் சொற்சிலம்பம் இவ்வெண்பா. “சுத்த சைதன்ய வடிவாக விளங்கும் ஆத்மாவே ஸத்யமானது. நானாவித தோற்றங்களை அறியக்கூடிய ஞானம் பொய்யாகிய அஞ்ஞானம் ஆகும். பொய்யாகத் தோன்றும் எந்த அஞ்ஞானமும், ஞானமே ஸ்வரூபமாக உள்ள ஆத்மாவை அன்றி வேறாக இல்லை. பற்பல நாமரூபங்களுடன் கூடிய அணிகள், அடிப்படையான பொன்னாகிய சத்யத்தை அன்றி வேறில்லை” என்கிறார் பகவான்.*

*ஸத்தியம் சித் ஸ்வரூபம் அது எவ்வித மாற்றமும் இன்றி நிரந்தரமாகப் பிரகாசிப்பதால் “ஞானமாம் தானே மெய்” என்கிறார் பகவான். எல்லா மாறுபாடுகளும் அழிந்து, அடங்கி, ஒடுங்கியபின் ‘நான் இருக்கிறேன்’ என்ற உள்ள பொருளின் பிரக்ஞை ஒன்றே மிஞ்சி நிற்கிறது. அதுவே என்றும் உள்ள ஸத்யம். அந்த அடிப்படை மெய்யுணர்வு இல்லாவிடில் வெளித்தோன்றும் உலக அறிவும் இருக்கமுடியாது. இதையே “பொய்யாம் அஞ்ஞானமும் தன்னைஅன்றி இன்று” என்கிறார் பகவான். அஞ்ஞானமும்கூட*

இருப்பு உள்ள ஒருபொருள் அல்ல. அது ஞானமற்ற நிலைதான். எனவே 'பொய்யாம் அஞ்ஞானமும்' ஆத்மாவாகிய ஸத்யத்தை அன்றி உலகிற்குத் தனி இருப்பு இல்லை. எப்படி அடிப்படையான பொன்னை விட்டு ஆபரணங்கள் தனித்து நிற்க முடியாதோ, அதைப்போல மெய்யான ஞானத்தைவிட்டு, பல்வேறு விதமாகத் தோன்றும் உலக அறிவு தனித்து நில்லாது. இப்படி உலகமாகத் தோன்றுவது எது? யாருக்கு? என்று விசாரணை செய்தால், உலகம் முதலிய பொருண்மைகள் தாம் தோன்றுவதற்கு அடிப்படையான பரத்திலேயே மறைந்து விடுகின்றன. ஆத்மா ஒன்றே ஸத்யம் என்கிறார் பகவான்.

மூன்றாவது தர்மம் 'ஆஸ்தேயம்' என்பது. எதையும் அபகரிக்காமல் இருப்பது என்ற நேரடிப்பொருள். இதன் உள்ளிடைப் பொருள், தான் உயிர் வாழ இன்றியமையாத பொருள் தவிர வேறு எதையும் கொள்ளாது இருப்பது மற்றும் தன்னிடம் உள்ள தனக்குத் தேவையான ஒன்றைக்கூட பிறர்க்கு ஈவது. பகவான் வாழ்க்கை முழுவதுமே இதற்கு எடுத்துக்காட்டு. மலையில் ஒரு கோவணாண்டியாய்த் திரிந்தபோது அந்த ஒரே கோவணமும் கிழிந்தது. வேறு ஒரு கோவணத்தைக்கூடத் தேடிப்போகாமல், கிழிந்த கோவணத்தில் இருந்தே ஒரு நூலைப் பிரித்து எடுத்து, ஒரு காட்டு முள்ளையே ஊசியாய்ப் பயன்படுத்தி அதைத் தைத்துக் கொள்வார். பின்னர் ஒரே துண்டைக் குளித்தபின் உடல் துடைக்கவும், வெயில் காலத்தில் தலைக் கவசமாகவும், குளிருக்குப் போர்வையாகவும் பயன்படுத்திக் கொள்வார். இதுவல்லவா அபரிக்கிரஹம்!

நாலாவது தர்மம் தூய்மை – வெளித் தூய்மை என்பது ஸ்நான, வஸ்திர, ஆஹார நியமங்களால் அமையும்.

*அருணை வந்து சேர்ந்த ஆரம்ப காலங்களில் தன் உடல் ப்ரக்ஞையேயற்று, சிக்குப் பிடித்த அடர் தலையுடனும், செதில்செதிலாக அழுக்கு மண்டியும் இருந்தார். பின்னர் அவ்வாழ் நிலையினையும் கடந்த ஸஹஜ ஸமாதியில் வாழ்ந்து வந்த இறுதிநிலைவரை புறத் தூய்மையைக் கடைப்பிடித்தார் பகவான். தனது அடியார்க்கும் அதனை எடுத்துக்கூறுவார். நடந்த வந்த கால்களை அலம்பும்போதும், ஒரு பாதத்தின்மீது ஒன்றை வைத்துத் தேய்க்காமல், பாதங்களைக் கைகளாலேயே தேய்த்துக் கழுவி சுத்தமாக்குவது*

***புறந்தூய்மை நீரால் அமையும், அஹம்தூய்மை***
***வாய்மையால் காணப் படும்.***

*என்னும் வள்ளுவர் வாக்கிற்கு ஒப்ப, புறம் தூய்மையுடன், ஸத்யம் ஜொலிக்கும் உள்ளத்தால் அகத் தூய்மையுடன் வாழ வழிகாட்டினார் பகவான்.*

*ஐந்தாவது தர்மம் இந்திரிய நிக்ரஹம் என்னும் புலனடக்கம்.*

***ஒருமையில் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்***
***எழுமையும் ஏமாப் புடைத்து.***

*‘ஐந்தவித்தான் ஆற்றல்’ என்றும் வள்ளுவர் சிறப்பித்துக் கூறும் புலனடக்கம்,*

***யதா$^{3}$ ஸம்ஹரதே சாயம் கூர்மோங்கா$^{3}$நீவ ஸர்வஶ:***
***இந்த்$^{3}$ரியாணீ இந்த்$^{3}$ரியார்தே$^{2}$ப்$^{4}$ய: தஸ்ய ப்ரக்ஞா***
***ப்ரதிஷ்டி$^{2}$தா॥***

*எவன் ஒருவன் ஆமையானது தன் அங்கங்களைச் செய்வதுபோல, புலன்களை இந்திரிய விஷயங்களில் இருந்து எல்லாவகையிலும் உள்ளே இழுத்துக் கொள்கிறானோ, அவனது ஞானம் நிலைபெற்ற ஒன்று என்று பகவக்கீதை 2-58 லும்,*

***ஆபூர்யமாணம் அசலப்ரதிஷ்ட$^{2}$ம்***
***ஸமுத்$^{3}$ரம் ஆப: ப்ரவிஶந்தி யத்$^{3}$வத் ।***

*தத்[3]வத் காமாயம் ப்ரவிஶந்தி ஸர்வே*
*ஸ ஶாந்திம் ஆப்னோதி ந காமகாமீ ॥*

*(கீதை 2.70)*

*எங்கும் நிரம்பியதும் நிலைகுலையாததும் ஆகிய ஸமுத்ரத்தை நதிகள் எவ்வாறு அடைகிறதோ, அவ்வாறே ஆசைகள் ஆத்மஞானியிடம் வந்து தாக்கமின்றிக் கரைகின்றன. அவன் நிரந்தரமான அமைதியில் ஒளிர்கின்றான் என்று புலனடக்கம் கொண்டோன் சிறப்பை கண்ணன் கூறுகிறான். இத்தகைய புலனடக்கத்தை மிகச் சிறுவயதிலேயே பெற்றவர் பகவான். மதுரையில் ஞான எழுச்சி பெற்ற உடனேயே அவரது புலன்கள் அனைத்தும் ஜயிக்கப்பட்டன. பசி, தாகம் போன்ற அடிப்படைத் தேவைகளும்கூட அற்றுவிட்டன. தந்தையின் அழைப்பிற்கு ஏற்ப, மதுரை நகரில் புகைவண்டியில் உண்டி ஏதும் இன்றி திருச்சி சந்திப்பில் இறங்கியவுடன் சிறிது பசி உணர்வு வந்தவுடன், இரு பேரிப் பழங்கள் வாங்கி, அதில் ஒன்றை உண்டவுடனேயே பசி உணர்வு அடங்கி விட்ட. சில நாட்கள் முன்புவரை, மூன்று வேளை சம்பிரமமாக உண்டுவந்த சிறுவன், ஞானஎழுச்சி பெற்ற உடனேயே இந்திரியங்கள் வெல்லப்பட்டு, பசி என்னும் ஆதார உணர்வு கூட அடங்கிப் போன அதிசயத்தைக் காண்கிறோம்.*

*இவை அனைத்தும் சாமான்ய தர்மங்கள். இவை அனைத்தும் முயற்சி இல்லாமலேயே ஒருங்கே பொருந்துகின்ற ஞான இமயம் பகவான் இவற்றோடு, தர்ம சாஸ்திரங்கள் கூறும் எட்டு ஆத்ம குணங்களையும் பொருத்திப் பார்த்தால் மீண்டும் பகவானின் திருவருவே வெளிப்படுகிறது. அவையாவன தயை (கருணா), ஷாந்தி (பொறுமை), அநஸூயை (பொறாமை அற்று இருத்தல்), ஸௌசம் (தூய்மை), அநாயாஸம் (முயற்சியே இல்லாமல் எப்போதும் மகிழ்வுடன்*

*இருந்தல்) மங்களம், கார்ப்பண்யம் (பரந்த மனம்), அஸ்ருஹா (பற்றின்மை).*

*இத்தனையையும் பரிபூர்ணமாக வாழ்ந்து காட்டிய ஆதர்ஸ புருஷர் பகவான். அவர் விடுகின்ற ஒவ்வொரு மூச்சும், எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியுமே தர்மமயமாக அருள்மயமாக இருந்தது. ஏனெனில் அவரே அறத்தின் திருவுருவம்.*

*பகவானின் முக்கியமான உபதேசங்களில் ஒன்று, தற்காலத்தையே பற்றி நில் என்பதும். இதனை வெகு சிறப்பாக உள்ளது நாற்பது 15ஆவது பாடலில் கூறுகிறார்.*

*நிகழ்வினைப் பற்றி இறப்புஎதிர்வு நிற்ப*
*நிகழ்கால் அவையு நிகழ்வே – நிகழ்வொன்றே*
*இன்றுஉண்மை தேராது இறப்புஎதிர்வு தேரஉனல்*
*ஒன்றுஇன்றி எண்ண உனல்.*

*பொருள்: இப்பொழுது இக்கணத்தில் நிகழ்காலத்தினைப் பற்றிக் கொண்டுதான் சென்ற காலமும், எதிர்காலமும் நிற்கின்றன. ஆனால், இந்த இறந்த காலமும், எதிர்காலமும், அவை தோன்றி நிகழும் காலத்தில் அவையும் நிகழ்காலமே. எனவே நிகழ்காலம் ஒன்றே மூன்று காலமும் ஆகும். எனவே, 'நிகழ்காலம்' என்பதின் உண்மையைத் தெரிந்து கொள்ளாமல், இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் ஆராய்வது 'ஒன்று' என்னும் எண்ணின் மதிப்பினை உணராது, அதைவிட்டு, மற்ற எண்ணங்களை மதிப்பிடக் கணக்கிடுவது போலாம்.*

*'நிகழ்காலம்' – Now' என்னும் இந்தக் கணம் ஒன்றே உண்மை. ஸ்வாமி சின்மயாநந்தர் இதனை அழகாக விளக்குவார்: Past is Destiny; Future is Mystery. Reality is 'Now'. 'Present' is the same word for a gift. Hence 'Now' is a present to you. Live in it என்பார்.*

*புத்தரின் க்ஷணிக வாதமும் இந்த நிகழ்காலம் ஒன்றின்மீதே கருத்தை வை. ஏனெனில் ஒவ்வொரு கணமும் இறந்த காலமும், எதிர்காலமும் மாறிக் கொண்டே உள்ளன. You cannot take bath in the same river twice என்பது புத்தரின் பிரசித்தி பெற்ற கருத்து.*

*பகவானின் உபதேசமாவது: "நான் இன்னார் என்றும் வடிவில் எழும் தற்போதைய அகந்தையை விடாது நாடினால், அது தன் மூலஸ்தானமாகிய ஆன்மாவில் ஒடுங்கி 'எழுச்சி' அற்றுப் போவதுபோல், காலத்துள் முதல் காலமாகிய நிகழ்வு என்பது எது என்று ஒருவன் நாட ஆரம்பித்தாலும், அது தன் மூல நிலையத்தில் ஒடுங்கி உருவழியும்.*

*நாம் ஒரு விநாடிக்கு முன் நிகழ்ந்தவற்றை இறந்த காலமாய்க் கருதுகிறோம். அடுத்த விநாடியில் நடப்பவற்றை எதிர்காலமாகக் கருதுகிறோம். அதனால் ஒரு நொடிக்கு முன்னும், அல்லது ஒரு விநாடிக்குப் பின்னும் நம் கவனத்தைச் செலுத்தாமல் தற்போதுள்ள விநாடி என்பது எது என்று கவனிப்போமானால் தற்போதுள்ள நிகழ்காலமாகிய ஒரு விநாடியிலும்கூட பத்தில் ஒரு பங்குகூட, இறந்த காலமாகவோ, எதிர் காலமாகவோ கருதப்படும் என்பது விளங்கும். அதாவது, நமக்கு ஏற்படும் ஒரு மிகச் சிறிய எண்ணம்கூட இறந்த காலத்தையோ எதிர்காலத்தையோ பற்றியதாகத்தான் தீர்மானிக்கப் படுகிறது. ஆகவே அந்த நுண்ணிய இறப்பு-எதிர்வுகளை ஒதுக்கி, நிகழ்வு எது என்று கூர்ந்து நோக்குவோமாயின், நிகழ்காலம் என்பது ஒன்றுமே இல்லாது மறையும். அதாவது, நமது சகல எண்ணங்களும் இறந்தகாலம் அல்லது எதிர்காலம் என்ற இரண்டில் ஒன்றில்தான் நடக்கின்றன.*

*எனவேதான் பகவான் 'நிகழ்வு ஒன்றே இன்று உண்மை தேராது இறப்பு எதிர்வு தேர உனல் ஒன்று இன்றி தேர உனல்!' என்று நகைக்கிறார்.*

எனவே இறப்பு-எதிர்வு இரண்டையுமே நோக்காது, நிகழ்வு ஒன்றையே நாடுவேன் என்ற தீவிர சாதகனின் உள்ளத்தில் ஒரு எண்ணமும் இல்லாது ஒழிகிறது. அப்போது மனமும் தன் பிறப்பிடத்தில் ஒடுங்கிவிடும். அதுவே முக்காலமும் மூவிடமும் கடந்த யதார்த்த நிலை. இதையே தனது பிரசித்தி பெற்ற நூலாகிய 'Power of Now' என்பதில் Eckhart Tolle விவரிக்கிறார்.

இந்த நிகழ்வில் நிலை பெறுவது என்பது ஸத்குருவின் அருளால் சித்திக்கும் என்பதை சூஃபி ஞானி குணங்குடி மஸ்தான் சாஹிபு எடுத்துக் கூறும் எழிலைக் காண்போமா!

*நிஜமான தெய்வம் உன்னை அன்றி*
*உண்டு என்று அடிமை*
*நினையாமல் அருள் புரியவும்*
*நீர்க்குமிழி ஒத்த காயத்தை நிலைஅன்று என*
*நிறுத்து வைத்து அருள் புரியவும்*
*பசுபதி பாசமும் பாவையர்கள் நேசமும்*
*பாழாக அருள் புரியவும்*
*பக்தி மார்க்கம் தரும் முக்தி மோகம் தருமம்*
*பருவம் ஒன்று அருள் புரியவும்*
*அசரசர பேதமாய் ஆடுவது எது என்று*
*அறைந்து அறைந்து அருள் புரியவும்*
*அஞ்ஞான மூடம் துறக்கவும் மெய்ஞ்ஞான*
*ஆனந்த அருள் புரியவும்*
*வசமான தேவனே! தவராஜ சிங்கமே!*
*வரவேண்டும் என்தாள் அருகே!*
*மாமணங்குடி வாழும் என்னகத் தீசனே!*
*மௌன தேசிக நாதனே!*

*மீண்டும் சந்திப்போம்*

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# யதார்த்தம் சொல்பவர் குரு

## பிர. கிரிதர ஜெகதீஷ்

விதவிதமான தேடுதல்களுடன் பலவிதமான சாதகர்கள் ரமண சந்நிதியை நாடி வருகிறார்கள். அவர்களுக்கு பகவான் ரமணர் தரும் பதிலளிப்புகளும் விதவிதமாக இருக்கின்றன. மௌனம், அலட்சியம், குறும்பு தவழும் பார்வை, புன்னகை, ஓரிரு வார்த்தைகளில் பதிலளிப்பு, கேட்ட கேள்விக்கு சம்பந்தம் இல்லாமல் வேறு எதையோ கூறுவது, சில சமயங்களில் ஒரு கேள்விக்கு ஓரிரு நாட்கள் தொடர்ந்து வழங்கப்படும் விளக்கம்.

இத்தனை விதமான உபதேச முறைகள் பகவான் சந்நிதியில் நடந்திருக்கிறது. நடந்து கொண்டிருக்கிறது. எவ்விதத்திலும் தீர்வை நாடி வந்தவர்களுடைய தாகம் தணிக்கப்படுகிறது. தேவைகள் எத்தனையோ இருந்தாலும் அவைகள் அனைத்திலும் ஊடுருவி நிற்கும் ஆதாரத் தேவை எது தெரியுமா?

பகவான் ரமணர் கூறுகிறார்:

உன்னைத்தான் நீ தேடிக் கொண்டிருக்கிறாய். ஆகவே உன்னை யார் என்று அறி. அதுதான் யதார்த்தம் (உண்மை). உன்னைத் தவிர வேறு எதைத் தேடி அலைந்தாலும் அவை அனைத்தும் அயதார்த்தம் (வெறும் தோற்றங்கள். பொய்).

பகவான் ரமணரின் அணுகுமுறை மிகவும் எளிமையானது. யதார்த்தமானது. கோட்பாடுகள், கொள்கைகள், சித்தாந்தங்கள் என்று சிக்கல்களை நீட்டிப்பதை அவர் தவிர்க்கிறார். உண்முகத்துடன் ஒரு சில நிமிடங்கள் நிதானம் செய். வாழைப்பழத்திலிருந்து தோல் உரிப்பதுபோல குழப்பங்கள் விலகிவிடும்.

*சத்யம் புரியும். அவ்விதம் புரிந்து கொள்ளப்பட்ட சத்யம் உன்னுடைய இயற்கை என்று உணரும்வரை சில காலங்கள் தொடர்ந்து விசாரம் செய். அஹங்காரத்தின் தலையீடின்றி வாழும் நுணுக்கம் புரியும். இதுதான் பகவான் ரமணரின் வழிமுறை.*

ஒரு ஆச்ரமத்தில் குரு ஒருவர் இருந்தார். உண்மையை நாடிய சாதகர்கள் பலரும் அங்கே குருகுல வாசம் செய்து கொண்டிருந்தனர். சாஸ்த்ர நுணுக்கங்களை பலவிதங்களில் குருவானவர் அவர்களுக்கு உபதேசம் செய்வார். ஒருமுறை குருவானவர் சிஷ்யர்களை அழைத்தார். ஒரு கண்ணாடி பாட்டிலைக் காட்டினார். அதற்குள் ஒரு அன்னப்பறவை அடைக்கப்பட்டிருந்தது. அந்த அன்னப்பறவையை கண்ணாடி பாட்டிலிலிருந்து வெளியே எடுக்க வேண்டும். ஆனால் இரண்டு நிபந்தனை 1. பாட்டிலை உடைக்கக் கூடாது. 2. அன்னத்தைக் கொல்லாமல் வெளியே எடுக்க வேண்டும். எப்படி எவ்வாறு என்று சிந்தித்து நின்றனர். அவர்களில் உத்தமமான ஒரு சிஷ்யன் கேட்டான்: சுவாமி, அன்னப்பறவை பாட்டிலுக்குள் எப்படிச் சென்றது என்பதை மட்டும் கூறுங்கள். அதை நான் உயிருடன் வெளியே எடுத்து விடுகிறேன். பாட்டிலையும் உடைக்க மாட்டேன். அதற்கு குரு கூறினார்: நான் அந்தப் பறவையை உள்ளே போடவில்லை. சிஷ்யன் உடனே பதில் அளித்தான், அப்படியானால் அதை நான் வெளியே எடுத்து விட்டேன். குரு கூறினார்: நீ செய்தது சரி.

இங்கு நடந்தது என்ன என்று பார்க்க வேண்டும்.

யதார்த்தத்தில் அன்னப்பறவை பாட்டிலுக்கு வெளியேதான் இருந்தது. தூரத்தில் இருந்து பார்த்தால் அது கண்ணாடி பாட்டிலுக்குள் இருப்பதைப் போலத் தெரிகிறது. அவ்வளவுதான். ஆகவே குருவானவர் உபதேசம் செய்தார். அந்த அன்னப்பறவையை

நான் பாட்டிலுக்குள் போடவில்லை என்று. பிறகு, சிஷ்யன் புரிந்து கொண்டான், அது வெளியே எடுக்கப்பட்டுவிட்டது என்று.

'ஸோயம் ஆத்மா சதுஷ்பாத்' இந்த ஆத்மா நான்கு பாதங்களுடன் இருக்கிறது என்று மாண்டூக்ய உபநிஷத் கூறுகிறது. ஆத்மா என்றால் நான். பாதம் என்றால் பகுதி (division). இதுவரை நாம் புரிந்து கொண்டிருக்கிற 'நான்'ஐப் பற்றி சாஸ்த்ரம் நமக்குத் தருகிற அறிமுகம் இது. ஆத்மா+அநாத்மா. அதாவது உண்மையும், பொய்யும் கலந்துள்ள ஒரு தத்துவத்தை நான் என்று புரிந்துகொண்டு அதை அனுபவித்து வருகிறோம். அப்படிப்பட்ட 'நான்'-ஐ எடுத்துக்கொண்டு அதை நன்றாகப் பிரித்து சாஸ்த்ரமானது உபதேசம் செய்கிறது. உண்மையில் ஆத்மா பிளவுபடாதது. பிறகு அப்படிப்பட்ட ஆத்மாவை சாஸ்த்ரமானது எதற்காகப் பிரிக்க வேண்டும் என்பது கேள்வி. ஒரு பெரிய வீட்டை நம்முடைய சௌகரியத்திற்காக தனித்தனி அறைகளாகப் பிரிப்பதைப்போல பிளவற்ற பூர்ணமான ஆத்மாவை விசாரத்திற்காக சாஸ்த்ரமானது நான்காகப் பிரிக்கிறது.

பகவான் ரமணரிடம் அன்பர் ஒருவர் வினவினார்:

ஆத்மா என்றால் என்ன?

பகவானுடைய பதில்: ஜீவாத்மாவே ஆத்மா.

பகவான் இவ்விதம் கூறுவதற்குக் காரணம் ஜீவ அனுபவம் என்பது நம்மிடம் தார்டியமாக, மிக உறுதியாக இருக்கிறது. ஆகவே உடல், மனம் இவைகளை உள்ளடக்கிய உலகத்தை விசாரிக்க வேண்டியுள்ளது. காரணம் உலகமானது பிரம்மத்திடம் ஏற்றுவிக்கப்பட்டுள்ளது. கயிற்றில் ஏற்றுவிக்கப் பட்டுள்ள பாம்பை விசாரம் செய்தால்தான் கயிற்றை அறிய முடியும். அதுபோல பிரம்மம் அல்லது ஆத்மாவிடம் ஏற்றுவிக்கப்பட்டுள்ள ஜகத்தை விசாரம்

*செய்தால்தான் பிரம்மத்தை அல்லது ஆத்மாவை அறிய முடியும்.*

*ஜகத் என்றால் என்ன?*

*சாஸ்த்ரம் கூறுகின்ற மூன்று பாதங்கள் அல்லது பகுதிகள்தான் ஜகத். அந்த மூன்று பகுதிகள் என்னவென்றால் ஜீவர்களாகிய நம்முடைய மூன்று அனுபவங்கள்.*

*அவைகளாவன :*

1. *ஜாக்ரத் அவஸ்த்தா விழிப்பு நிலை*
2. *ஸ்வப்ன அவஸ்த்தா கனவுநிலை*
3. *சுசுப்தி அவஸ்த்தா உறக்கநிலை*

*இம்மூன்று அவஸ்த்தைகளும் சேர்ந்து உலகம், ஜகத் என்று அறியப்படுகிறது. இம்மூன்று அவஸ்த்தைகளுக்கும் ஆதாரமாக இருக்கின்ற ஆத்ம சைதன்யமானது நான்காவது பாதம் என்று சாஸ்த்ரம் கூறுகிறது. கயிற்றில் தோன்றுகின்ற பாம்பை விசாரிப்பதென்பது கயிற்றை விசாரிப்பதாகிறது. அதுபோல மூன்று அவஸ்த்தைகளை விசாரிப்பதென்பது ஆத்மாவை விசாரிப்பதாகிறது.*

*பகவான் ரமணரிடம் ஒரு அன்பர் வினவினார்:*

*பகவான், ஜீவாத்மாவே ஆத்மா என்று கூறினீர்கள். ஜீவாத்மா என்பது என்ன? ஜீவாத்மாவும், ஆத்மாவும் ஒன்றா? அல்லது வெவ்வேறா?*

*பகவான் புன்னகையுடன் கூறினார்:*

*ஏற்கனவே இல்லாது புதியதாய்த் தோன்றுவன யாவும் மறையும். படைப்பெல்லாம் அழியும். என்றும் இருப்பது பிறவாது; இறவாது; தோன்றாது; மறையாது; இப்போது தோற்றத்தையே உண்மையெனக் கருதி மயங்குகின்றோம். தோற்றம் என்பது அழிவைத்*

தன்னுட் கொண்டே தோன்றுகிறது. தோற்றம் அனைத்திற்கும் அடிப்படை உண்மையொன்று உளதென்று அறிந்து அவ்வுண்மையை அறிய வேண்டும். நான் என்னும் அகந்தை அவ்வுண்மையில் ஒடுங்கியொழிந்தால் மெய்ப்பொருள் தடையற்று ஒளிரும்.

பகவானுடைய மேற்கண்ட உபதேசத்தை விசாரித்துப் பார்ப்போம்.

ஜாக்ரத் அவஸ்த்தையில், அதாவது விழிப்பு நிலையிலுள்ள ஜீவர்களாகிய நமக்கு 'விச்வன்' என்று பெயர். அந்நிலையில் அனுபவிக்கப்படும் விஷயத்திற்கு அல்லது உலகத்திற்கு ஸ்தூல பிரபஞ்சம் என்று பெயர். இனி, ஸ்வப்ன அவஸ்த்தையில் அதாவது கனவு நிலையிலுள்ள ஜீவர்களாகிய நமக்கு 'தைஜஸன்' என்று பெயர். அந்நிலையில் அனுபவிக்கப்படும் உலகத்திற்கு ஸ்வப்ன பிரபஞ்சம் என்று பெயர். ஸ்வப்ன பிரபஞ்சத்தை சூக்ஷ்ம பிரபஞ்சம் என்று அழைக்கலாம். பிறகு, சுஷுப்தி அவஸ்தையில் அதாவது ஆழ்ந்த உறக்க நிலையிலுள்ள ஜீவர்களாகிய நமக்கு 'பிராக்ஞன்' என்று பெயர். அந்நிலையில் அனுபவிக்கப்படும் உலகத்திற்குக் காரண பிரபஞ்சம் என்று பெயர். இனி விழிப்பு, கனவு, உறக்கம் இம்மூன்றுக்கும் ஆதாரமாக இருக்கின்ற சைதன்ய ஸ்வரூமாகிய எனக்கு 'துரியம்' என்று பெயர். இந்த துரியம்தான் ஆத்மா அல்லது பிரம்மம் என்று அறியப்படுகிறது.

பொதுவாக அவஸ்த்தாத்ரய விசாரமானது த்வம்பதத்தை அதாவது ஜீவனுடைய தன்மையை நுணுக்கமாக ஆராய்ந்து நிர்ணயம் செய்யப் பயன்படுகின்றது. ஜீவாத்மனே ஆத்மா என்று பகவான் ரமணர் கூறும்பொழுது அந்த வாக்யமானது ஜீவனுடைய தனித்தன்மையை விசாரிக்கச் சொல்கிறது.

*பகவான் ரமணரிடம் அன்பர் ஒருவர் கீழ்க்கண்டவாறு வினவினார்:*

*பகவான், இறப்பிற்குப் பின் நம்முடைய நிலை என்ன?*

*பகவான் ரமணர் கூறுகிறார்:*

*இப்போது உயிரோடு இருக்கும்போது நாம் எப்படி இருக்கிறோம் என்பதைப் பார்ப்போம். இனிமேல் வருவதை வருங்காலம் பார்த்துக் கொள்ளும். படைப்பின் முந்தைய நிலையையும், படைப்பின் கிரமத்தையும் சாஸ்த்ரம் கூறுவது இப்போது உள்ளதை நாம் அறிவதற்காகவே. கடவுளோ அல்லது உலகமோ நமக்கு அந்நியமாக இருந்தால் ஆழ்ந்த உறக்கத்தில் அவைகள் எங்கே? தூங்கும்போது இருந்த நாம்தான் இப்போதும் இருக்கிறோம். ஆழ்ந்த உறக்கத்தில் பிறப்பைப் பற்றியோ சாவைப் பற்றியோ ஏதேனும் கேள்வி எழுந்ததா? இப்போது மட்டும் இக்கேள்விகள் எதனால் எழுகின்றன?*

*ஆக, ஜாக்ரத் (விழிப்பு நிலை), ஸ்வப்னம் (கனவு நிலை), சுசுப்தி (உறக்க நிலை) இம்மூன்று அவஸ்த்தைகளுக்கு ஆதாரமான துரியமாகிய ஆத்ம சைதன்யமாக நான் வீற்றிருக்கிறேன் என்ற தெளிவு கிடைக்கிறது.*

*துரியம் என்றால் என்ன?*

*துரியம் என்பது ஒரு அவஸ்த்தா (state of experience) அல்ல என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். துரியமாகிய நான் எந்த உபாதியோடும் சம்பந்தப்படாதவன் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். உபாதி என்றால் உடல் என்று அறிய வேண்டும். உடல் என்ன உபாதியோடு சம்பந்தம் வைக்கும்பொழுது துரியமாகிய எனக்கு பிரபஞ்ச*

அனுபவம் ஏற்படுகிறது. துரியம் என்பது தியானம், ஸமாதி போன்ற அவஸ்த்தைகளில் வருகிற ஒரு நூதன அனுபவம் அல்ல.

ஸமாதி நிலையில் இருப்பது துரியம் அல்ல. தியானப் பயிற்சியின் விளைவாக வருகிற ஒரு அவஸ்த்தைதான் ஸமாதி. ஜாக்ரத் அவஸ்த்தையில் இருந்து கொண்டுதான் ஸமாதியானது அனுபவிக்கப்படுகிறது. மற்ற ஸ்வப்ன, சுசுப்தி அவஸ்த்தைகளில் ஸமாதி வருவதில்லை. எனவே விழிப்பு நிலையில் வருகிற ஒருவித மனோநிலைதான் ஸமாதி. ஆகவே அது துரியம் அல்ல. பிறகு துரியம் என்றால் என்ன?

ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்.


நம்மிடம் வளையல், மோதிரம், தோடு என்ற மூன்று தங்க ஆபரணங்கள் இருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். இம்மூன்று ஆபரணங்களுக்கும் ஆதாரமான தங்கம் என்பது வளையலுக்கு வேறாக இருக்கிறதா அல்லது வளையலும் தங்கமும் ஒன்றா என்றால், வளையலும் தங்கமும் ஒன்று என்று கூற முடியாது. ஏனென்றால் வளையல் என்ற நாமரூபத்தை நீக்கும்போது வளையல் என்பது அழிந்துவிடும். ஆனால் தங்கம் என்பது அழிவதில்லை. எனவே வளையலும், தங்கமும் ஒன்று என்று கூற முடியாது. சரி, வளையலும், தங்கமும் வேறுவேறு என்று சொல்லலாமா என்றால் தங்கத்தை விடுத்து வளையல் என்ற ஒன்று தனித்து நிற்காது. காரணம் தனியான 'ஸத்' (இருத்தல்) என்பது வளையலுக்கு இல்லை. தங்கம் இல்லாமல் வளையல் இல்லை. ஆக, தங்கத்தையும், வளையலையும் ஒன்று என்றும் சொல்ல முடியாது. வேறு என்றும் சொல்ல முடியாது. பிறகு எப்படித்தான் சொல்வதென்றால், சாஸ்த்ரம் கூறுகிறது, சொல்ல முடியாது (அநிர்வசனீயம்). ஏனென்றால் தங்கம் என்பது ஸத்யம். வளையல் என்பது மித்யா. ஸத்ய

மித்யா சம்பந்தத்தை இப்படிப்பட்டது என்று சொல்ல முடியாது.

அதேபோல மோதிரம், தோடு ஆகிய மற்ற இரண்டு ஆபரணங்களுக்கும், தங்கத்திற்கும் இடையேயுள்ள சம்பந்தத்தைச் சொல்ல முடியாது. தங்கம் மட்டுமே யதார்த்தத்தில் இருக்கிறது. ஆபரணங்கள் என்பது தங்கத்தின்மேல் ஏற்றுவிக்கப்பட்டுள்ள வெறும் நாமரூபம் மட்டுமே. அதுபோல சைதன்ய ஸ்வரூபமாகிய துரியம் மட்டுமே இருக்கிறது. ஜாக்ரத், ஸ்வப்ன, சுசுப்தி அவஸ்த்தைகள் என்பன அதன்மேல் ஏற்றுவிக்கப்பட்டுள்ள வெறும் நாமரூபம் மட்டுமே. துரிய சைதன்யமே விச்வனாக இருந்து விழிப்பை அனுபவிக்கிறது. துரிய சைதன்யமே தைஜஸனமாக இருந்து கனவை அனுபவிக்கிறது. அதே துரிய சைதன்யமே பிராக்ஞனாக இருந்து ஆழ்ந்த உறக்கத்தை அனுபவிக்கிறது. ஸ்தூல, சூக்ஷ்ம, காரண சரீரங்களாகிய உபாதியுடன் சேர்வதால் இப்படிப்பட்ட உலக அனுபவங்கள் நிகழ்கின்றன. உபாதியை மனதால் மித்யா என்று நீக்கி துரிய சைதன்யம் நான் என்று அறிவதே ஞானமாகிறது.

பகவான் ரமணர் கூறுவார்:

காகிதத்தில் எழுத்துக்கள் அச்சிடப்படுகின்றன. எனக்கு எழுத்துக்கள்தான் தெரிகிறது. காகிதம் தெரியவில்லையென்று நம்மால் கூறமுடியுமா? காகிதம் என்பது எழுத்துக்களுக்கு உள்ளும் புறமும் ஊடுருவி இருக்கிறது. காகிதம் இல்லாமல் எழுத்துக்கள் இல்லை. எழுத்துக்கள் காகிதத்தின்மேல்தான் நின்று கொண்டிருக்கின்றன. அதுபோல ஆத்மாவின்மேல் அனைத்தும் இருந்து கொண்டிருக்கின்றன. ஆத்மாதான் அனைத்துமாக இருந்து கொண்டிருக்கிறது. மித்யா உபாதியாகிய சரீரத்தில் மட்டும் நம்முடைய கவனம் இருப்பதால் ஆத்மா என்பது இல்லாதது போலவும்,



அதைவேறு எங்கோ தேடி அடைய வேண்டும் என்பது போன்ற தோற்றம் எழுகிறது. தன்னுடைய யதார்த்த ஸ்வரூபத்தை விட்டபடியால் உலகம், உடல் போன்ற இருமைகள் எழுகின்றன. உடல், மன உபாதிகளுக்கு சாக்ஷியாக, அறிவு ஸ்வரூபமாகத் தன்னை அறிந்துணரும் பொழுது இருள் மறைகிறது. ஒளி துலங்குகிறது.

அதுவாகவோ, வேறு எதுவாகவோ மாறுவது மோக்ஷம் அல்ல. வாஸ்தவமாக நாம் எதுவாக இருக்கிறோமோ அதைத் திறந்த மனதோடு உணர்வதுதான் மோக்ஷம். குருரமணர் சுட்டிக் காட்டும் திசை அதுதான்.

# ஔவைக் குறள்

## ராம் மோஹன்

### *12. நினைப்புறுதல்*

*குறள் 111: கருத்துறப் பார்த்துக் கலங்காமல் உள்ளத்து*
*இருத்திச் சிவனை நினை*

*பொருள்: இடையறாது சலித்துக் கொண்டு இருக்கிற மனத்தின் அசைவை நிறுத்தி, இதயத்தில் கவனத்தை நிறுத்தி, சற்றும் சஞ்சலத்துக்கு இடம் கொடாமல், ஒரே உண்முக நோக்குடன் சதாசிவனை மனத்துள் தியானிப்பாய்.*

*விளக்கம்: இதே கருத்தை பகவத் கீதை தியான யோகம் என்னும் ஆறாம் அத்யாயத்தில் கிருஷ்ணர் கூறுகிறார்.*

*யோகீ[3] யுஞ்ஜீத ஸததமாத்மானம் ரஹஸி ஸ்தி[2]த:*
*ஏகாகீ யத சித்தாத்மா நிராஶீர பரிக்[3]ரஹ:॥ (கீதை 6-10)*

*தனிமையான இடத்தில் துணை ஏதுமின்றி தனியாய் இருந்துகொண்டு மனத்தையும் தேஹத்தையும் அடக்கியவனாய், எந்த உடைமையும் இல்லாதவனாய் யோகியானவன் மனத்தை ஆத்மாவில் கரையச் செய்ய வேண்டும்.*

*இந்த யோகத்தின் குறிக்கோளானது மனத்தை சுத்தப்படுத்துவதே. உபநிஷதம் கூறுவதுபோன்று யார் மனத்தைத் தூய்மையாக ஆக்கி உள்ளானோ அவனை பரமாத்மா தானே வந்து வகித்துக் கொள்கிறது.*

*'யோக[3]மாத்ம விஶுத்தயே' (ப.கீ. 6-12)*
*கருத்தனுக்கு ஆக்கும் நிஷ்காமிய கர்மம்*
*கருத்தைத் திருத்தியது உந்தீபற*
*கதிவழி காண்பிக்கும் உந்தீபற (உபதேச உந்தியார்)*

*குறள் 112: குண்டலியின் உள்ளே குறித்துஅரனைச் சிந்தித்து*
*மண்டலங்கள் மேலாகப் பார்.*

பொருள்: குண்டலி யோகம் செய்வதன் மூலம் பிரணவத்தை தியானித்து, ஆறு ஆதாரங்களையும் கடந்து ஸஹஸ்ராரம் எனப்படும் பெருவெளியில் சச்சிதானந்த அனுபவத்தைப் பெறுவாய்.

விளக்கம்: உள்ளது நாற்பது அனுபந்தம் 19-ஆவது பாடலில் இத்தகைய யோக சாதனை விளக்கப்படுகிறது.

அதன்முகம் இகலுளது அகம்உள சிறுதுளை
அதனில் ஆசாதியொடு அமர்ந்துஉளது இருந்தமம்
அதனை ஆசிரித்துஉள அகிலமா நாடிகள்
அதுவளி மனதுஒளி அவற்றினது இருப்பிடம்.

ஆத்மிக இதயத்தின் வாய்ப்புறம் மூடி உள்ளது. அதன் உள்ளே சிறிய துளை போன்ற உள்வெளி அதனில் ஆசை முதலிய சகலவிதமான வாசனைகளும் அடங்கிய அடர்ந்த இருள் உள்ளது. அந்த இருளாகிய அஞ்ஞானத்தை சார்ந்து உடலின் அனைத்துப் பெரிய நாடிகளும் இணைந்துள்ளன. அதுதான் பிராணன், மனம், அறிவு இவற்றின் இருப்பிடமாகும்.

சாதனையின் ஆரம்பநிலையில் சாதகன் உபாசனை மார்க்கத்தைப் பின்பற்றுகிறான். குண்டலினி யோகம் அல்லது ராஜயோகத்தின் மூலம் ஓம் என்னும் பிரணவத்தில் கருத்தினை ஒன்றி வாசனைகளைக் கடந்து செல்கிறான். இறுதியில் பரத்தில் ஒன்றுகிறான்.

ராப் பகலில்லா வெறுவெளி வீட்டில்
ரமித்திடுவோம் வா அருணாசலா (மணமாலை, 91)

இங்கு வெறுவெளி என்பது ஔவையார் குறிப்பிட்டுள்ள மண்டலம் கடந்த சிதாகாசத்தைக் குறிக்கிறது.

*குறள் 113: ஓர்மின்கள் சிந்தையில் ஒன்றச் சிவன்தன்னைப்*
*பார்மின் பழம் பொருளேயாம்.*

*பொருள்:* ஆழ்மனதில் ஆத்மாவாகிய சிவனைப் பற்றிய இடைவிடா உண்முக நோக்கையே பற்றி இருங்கள். அங்ஙனம் இடைவிடாமல் அப்யஸித்தால், இறைவனிடம் ஒன்றி 'நானே சிவம்' – அஹம் பிரம்மாஸ்மி – என்பதை அனுபவத்தில் காணலாம். அச் சிவமே ஆதி அந்தமில்லாப் பரம்பொருள் என்பதை உணரலாம்.

*விளக்கம்:* பரம்பொருள் என்னும் பிரயோகம் ஆழ்ந்த பொருளைக் கொண்டது. அநாதி காலத்தில் ஆரம்பம் எது என்றே தெரியாத காலத்திலே ஜீவன் உருப்பெற்றது. அந்த கால மூலத்திலேயே பரமாத்மா என் இதயத்தே புகுந்து, அங்கேயே நிலைபெற்று எனது ஆன்ம எழுச்சிக்காகக் காத்திருந்தது. தக்க ஆசானைச் சந்தித்து அவரது அருட் கொடையினால், நாம் வெளியே செல்லும் சிந்தையைத் திருப்பி, இதயத்தில் உள்ள பரத்துவ உணர்வின் மீது பதிக்கும்போது, அந்தப் பரம் நம்மை முழுதுமாக ஆட்கொண்டு, நானும், சிவமும் ஒன்றாகிறோம். இந்த ஆன்ம பரிபாகத்தையே ஔவையார் இந்தக் குறளில் விளக்குகிறார்.

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளம்மன்னிக்
கருத்துஇருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டு கொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள்தில்லை
கண்டேனே

என்று மணிவாசகர் கண்டபத்து பதிகத்தில் உயிரும் உணர்வும் உருப்பெறாத ஆதிகாலத்திலேயே எங்ஙனம் இறையருள் இதயத்தே புகுந்து, நிலைபெற்று, மெதுவாக உணர்வைச் சீர்படுத்தியது என்று கூறுகிறார்.

*குறள் 114:* சிக்கெனத் தேர்ந்துகொள் சிந்தையில் ஈசனை
மிக்க மலத்தை விடு.

*பொருள்:* தகுதி வாய்ந்த ஞானாசிரியனை ஆர்வத்துடன் தேடிக் கண்டுகொண்டு, அவனது

அருளால் வாசனைகளையும் ஆசைகளையும் ஒழித்து, ஞானாசிரியனிடம் இருந்து ஆத்ம விசாரம் செய்யும் முறையையும் உண்முகநோக்கத்தில் பயிற்சியும் பெற்று, அதை இடைவிடாமல் பின்பற்றினால் ஆத்ம சாட்சாத்காரத்தைப் பெறலாம்.

**விளக்கம்:** பரம்பொருளே குருவடிவாய் வந்து, நம் மீது அருள்கொண்டு பற்றினையும், வாசனைகளையும் அறுத்து, சாதகனை ஆன்மிக நெறிக்குத் தகுதி உடையவனாய்ச் செய்து, ஞானம் அடையச் செய்வதை திருமூலரும் கூறுகிறார்.

**களிம்பு அறுத்தான் எங்கள் கண்ணுதல் நந்தி**
**களிம்பு அறுத்தான் அருள் கண் விழிப் பித்துக்**
**களிம்பு அணுகாத கதிர் ஒளி காட்டிப்**
**பளிங்கில் பவளம் பதித்தான் பதியே.**

**(திருமந்திரம், முதல் தந்திரம், 114)**

நெற்றிக் கண்ணை உடைய சிவபிரான் சத்குருவாய் வந்து, சாதகனது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களையும், இவற்றிற்கு அடிப்படையான வாசனைகளையும் அறவே நீக்கினான். மேலும் பற்றாகிய இருள் வந்து சேராவண்ணம் ஞானமாகிய சூரியனை உதிக்கச் செய்து, பளிங்கு போன்று மாசுமறுவற்ற சுத்தமான ஜீவனில் அருட்சக்தியைப் பதியவைத்து உயர் ஞானம் பெறச் செய்தான் என்கிறார் திருமூலர்.

பல்வேறு பாதைகளில் போய் நேரத்தை வீணாக்காமல் தக்க ஞானாசிரியனை விரைவாகத் தேர்ந்தெடுக்க வேண்டியதன் அவசியத்தை ‘சிக்கெனத் தேர்ந்து’ என்று குறிப்பிடுகின்றார்.

தக்க ஞானாசிரியனை நம் ஆழ்மனம் தீவிரமாக விரும்பினால் அந்தத் தக்க ஞானாசிரியன் தானேவந்து நம்மை உய்விப்பான்.

"தானேவந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டு அருளும்" என்று ஸத்குருவின் அருட்செயல் பற்றி திருவாசகம் கூறுகிறது.

"குருவடிவாகி குவலயம் தன்னில் திருவடி வைத்த திறம் இது பொருள்!" என ஸத்குருவே வந்து நம்மை ஆண்டருள்வான் என்கிறார் மணிவாசகர்.

*யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கு எழுந்து அருளுவது இனியே*

என்னும் அழகிய சொற்றொடரை இங்கு நினைவு கூரலாம்.

*குறள் 115: அறமின்கள் சிந்தையில் ஆதாரத்தைச் சேர்ந்து*
*உறுமின்கள் உம்முளே ஓர்ந்து*

*பொருள்:* அலைகளாய் வெளிச்செல்லும் எண்ணங்களை உள்ளே திருப்பி, எங்கிருந்து இந்த எண்ணங்கள் எழுகின்றனவோ அந்த மூலமாகிய 'நான்' என்னும் எண்ணத்தில் ஒடுங்கச் செய்து, 'கோஹம்' (நான் யார்?) என்ற தேடல், 'ஸோஹம்' (அந்த ஆன்மாவே நான்) என்னும் பேரறிவில் முடிகிறது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

*விளக்கம்:* இதே கருத்தை பகவான் 'அருணாசல பதிகம்' 10ஆவது பாடலில் கூறுகிறார்.

*ஓர்த்திடும் உயிரின் சேட்டையை ஒடுக்கி*
*ஒரு தனது அபிமுகமாக*
*ஈர்த்து, அதைத் தன்போல் அசலமாச் செய்துஅவ்*
*இன்னுயிர் பலிகொளும் இஃதுஎன்*

(ஓர்த்திடும்: ஆழ்மனத்தில் அருணாசல பரமாத்மாவை நினைத்து தியானித்தல்

சேட்டையை ஒடுக்கி: வெளியே உலகப் பொருட்களை நோக்கி ஓடி மும்மலங்களில் சிக்கிக் கொள்ளும் மனதின் சேட்டையை அடக்கி

*ஒருதனது அபிமுகமாக:* ஒப்பற்ற பரமாகிய தன் முன்னிலையில்

*அதைத் தன்பால் இழுத்துவந்து:* அந்த ஜீவாத்மாவை தன்னைப்போல் சலனமற்ற பரமாத்மாவாகவே செய்து

*இன்னுயிர் பலிகொளும்:* பரிபக்குவம் அடைந்த ஜீவனை, தன்னுடனேயே வேற்றுமையின்றி ஒன்றச் செய்கிறது).

**குறள் 116: நித்தம் நினைத்துஇரங்கி நின்மலனை ஒன்றுவிக்கில்**
**முற்றும்அவன் ஒளியே ஆம்.**

**பொருள்:** வாசனைகளையும், ஆணவத்தையும் குருவருளால் நீக்கி, பரம்பொருளையே இடைவிடாமல் தியானம் செய்து, தூய்மையான பரம்பொருளில் நமது உண்முகத்தேடல் ஒன்றும்போது, பரமாத்மாவின் அளவற்ற ஞானப் பேரொளியில் ஜீவன் முற்றும் கரைகிறது.

**விளக்கம்:** நித்தம் நினைத்து நின்மலனை ஒன்றுவிக்கும் ஆத்மசாதனைத் தேடல், பகவானின் அக்ஷரமணமாலை 44ஆவது பாடலில் கூறப்படுகிறது.

**திரும்பி அகந்தனைத் தினம் அகக்கண்காண்**
**தெரியும் என்றனைஎன் அருணாசலா**

ஔவையார் கூறும் ‘நித்தம்’ என்பதும், பகவான் கூறும் ‘தினம்’ என்னும் சொல்லும், தினந்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் தியானிப்பது என்று பொருள் கொள்ளாமல், இடைவிடாது, ‘நான் யார்?’ என்ற தேடலை நாள் முழுதும் கைக்கொள்ள வேண்டும் என்று பொருள் கொள்ள வேண்டும். அது நமது வாழ்வின் இடைவிடாத பின்பற்றலாக மாறவேண்டும்.

‘நினைத்து இரங்கி’ என்ற சொற்றொடர்க்கு, திடவைராக்கியத்துடன், வெளிவிஷயங்களில் இருந்து மனத்தை இதயம் நோக்கித் திருப்பி, இடைவிடாது, ‘நான் யார்?’ என்று விசாரித்து ஆராயும்போது

தனக்குத்தானே ஆத்மப் பேரொளி விளங்கும் என்பது இவ்விரு பாடல்களின் உட்கருத்து ஆகும்.

*குறள் 117: ஓசை உணர்ந்துஅங்கே உணர்வைப் பெறும்பரிசால்*
*ஈசன் கருத்தாய் இரு.*

*பொருள்: ஞானத்தை அடையும் முயற்சியில், யோகப் பயிற்சியின் உள்ளே ஒலிக்கும் அநாஹத சப்தத்தை உணர்ந்து அதிலேயே மனம் பொருந்தி, எப்பொழுதும் 'நான் யார்?' என்ற ஆன்மிகத் தேடலிலேயும், ஈஸ்வர சிந்தனையிலுமே இருப்பாய்.*

*விளக்கம்: 'ஓசை உணர்தல்': பதஞ்சலியின் அஷ்டாங்க யோகத்தில், நமது உடலில் ஏழு சக்தி மையங்கள் அல்லது நாடி மையங்கள் இருப்பது விவரிக்கப்படுகிறது. இவை ஏழு சக்ரங்கள் எனப்படும். மனித உடலுள் சக்தி, மூன்று நாடிகள் வழியாகப் பாய்கிறது.*

*1) 'சுஷும்னா' அல்லது 'சுழுமுனை' எனப்படும் மத்திய தலைமை நாடி. இதன் தொடக்கம் மூலாதாரம் என்னும் அடிப்படைச் சக்கரத்தில் உள்ளது. இங்கேதான் பரம்பொருளின் சக்தி வடிவம் ஒரு பாம்பு போன்று சுருண்டு கிடக்கிறது.*

*2) 'இடா' மற்றும் 'பிங்கலா' நாடிகள் இடது மற்றும் நாபியில் தொடங்கி, மூலாதாரம் வரை செல்கின்றன. இந்த நாடிகள் தம்முடனும் மற்றும் சுஷும்னா நாடியுடனும் பின்னிக் கிடக்கின்றன. இவைகள் ஆறு இடங்களில் பின்னிக் கொள்வது. மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விஸுத்தி, ஆக்ஞா என்பதை இந்த ஆறு பின்னல்களாக ஏற்படும் யோகாதார சக்கரங்கள்.*

*யோகப் பயிற்சியின் மூலமாகவோ, அல்லது குருஅருள் மூலமாகவோ, இந்தக் குண்டலினி எழுப்பப்படும்போது அது இந்த ஆறு ஆதாரச்*

*சக்கரங்களையும் துளைத்து ஏழாவதான ஸஹஸ்ராரத்தில் ஒன்றுகிறது. அப்போது சாதகன் ஆத்ம சாட்சாத்காரம் பெறுகிறான்.*

*பகவானின் உபதேசப்படி, ஆன்மஞானம் பெற்றவனுக்கு ஆத்மா இதய ஸ்தானத்தில் ஒடுங்கி, பரமாத்மாவுடன் ஒன்றாகிறது. ஞானவழியில் கூறப்படும் ஆன்மிக இருதயம் அஷ்டாங்க யோகத்தில் 'அனாஹத சக்ரம்' எனப்படுகிறது.*

*சாதகன் தீவிர சாதனையில் ஈடுபடும்போது, அவன் உள்ளிருந்து, யாரும் எழுப்பாமலேயே ஒரு தெய்வீக நாதம் அவன் நாடிகளில் பாய்கிறது. அஞ்ஞானம் நீங்கிய சாதகனுக்கு இந்த அநாஹதத் த்வனி இடைவிடாமல் கேட்டுக்கொண்டே இருக்கும். இந்த அனாஹத ஓசையிலேயே கருத்தை இருத்தி ஈஸ்வர தர்ஸனம் பெறுவாய் என்கிறார் ஔவையார்.*

*குறள் 118: இராப் பகல்அன்றி இருசுடர்ச் சிந்திக்கில்*
*பராபரத்தோடு ஒன்றலு மாம்.*

*பொருள்: இரவுபகல் அன்றி எல்லாக் காலத்திலேயும் நிரந்தரமாய் உள்ள பரம்பொருளைச் சதாகாலமும் தியானித்துக் கொண்டு இருந்தால் அந்தப் பராபரத்துடனேயே ஜீவன் ஒன்றி ஒன்றாகி விடும்.*

*விளக்கம்: இந்த ஔவைக் குறளின் கருத்து பகவானின் அருணாசல பஞ்சரத்னப் பாடலின் உட்கருத்தை முற்றிலும் ஒத்திருப்பதைக் காணலாம்.*

*வெளிவிடயம் விட்டு விளங்கும் அருணேசா*
*வளிஅடக்க நிற்கும் மனத்தால் – உளமதனில்*
*உன்னைத் தியானித்து யோகி ஒளிகாணும்*
*உன்னில் உயர்வுறும் ஈதுஉன்*

*(அருணாசல பஞ்சரத்னம், 4)*

*ஆத்மஜோதியாய் விளங்கும் அருணாசலா! வெளிவிஷயங்களை நோக்கிச் செல்லும் மனத்தை*

உண்முகமாகத் திருப்பி, யோக மற்றும் ஞானப் பிராணாயாமத்தால் மனம் ஓடுவதை நிறுத்தி, சஞ்சலமற்று நிற்கும் சாத்விக மனத்தினால், இடைவிடாது உன்னை இதயத்தே தியானிக்கும் ஆத்மசாதகன் உன்னை சித்வடிவமான ஜோதியாக அறிந்து உன்னிலேயே கரைந்து நிலைபெறுகிறான் என்று ஔவையின் கருத்தையே கூறுகிறார் பகவான்.

குறள் 119: மிக்க மனத்தால் மிகநினைந்து சிந்திக்கில்
ஒக்க சிவன் உருவமாம்.

பொருள்: ஒருமித்த மனத்தால் இறைவன் அருளையே நினைந்து நினைந்து ஆத்ம விசாரணை அல்லது தியானம் செய்ய, ஆத்ம சாட்சாத்காரமாம் சிவனுரு வெளிப்படும்.

விளக்கம்: ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுகிறார்: "ஒரு யானையைக் குளிப்பாட்டியவுடன் அது தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும். அது அவ்வாறு செய்ய இடமின்றி, சுத்தமான கட்டுத்தறியில் அதைக் கட்டிவிட்டால் அது சுத்தமாக இருக்கும்." (அதாவது குறிப்பிட்ட சமயத்தில் மட்டும் தியானம், ஜபம் முதலியவற்றைச் செய்து, அவை முடிந்தவுடன் முழுமூச்சாக உலக விஷயங்களில் ஈடுபட்டால், மனம் மீண்டும் உலக விஷயங்களையே நாடிச் செல்லும். பதிலாக, சதா சர்வகாலம் எத்தொழிலைச் செய்தாலும், இதயத்தில் சிவஸ்மரணை இருந்தால், மனம் தூயதாய் இருந்து, ஆன்ம எழுச்சி பெறும்.

ராமகிருஷ்ணர் மேலும் தொடர்கிறார்: "ஆகையால் எப்போதும் இறைவன் மீதே மனம் வைக்க வேண்டும். பகவானிடம் அன்பு வளர வேண்டும் என்றும், பொருளிலும், புகழிலும், சிற்றின்பத்திலும் பற்று ஒழியவேண்டும் என்று இடைவிடாது பிரார்த்தனை செய்ய வேண்டும்.

ஒருதரம் நாம ஸ்மரணையில் மனம் புனிதம் அடைகிறது. ஆனால் அடுத்த வினாடியே அவன் மனம் பாவத்தில் சென்று அழுக்கடைகிறது. கங்கா ஸ்நானத்தைப் பற்றிச் சொல்லும் கதை இது. ஒருவன் கங்கையில் மூழ்கும்போது அவன் பாவங்கள் கரையில் மரங்களில் அமர்ந்து இருக்கும். அவன் கரை ஏறியவுடன் அப்பிசாசுகள் அவன்மேல் குதித்து அவனை அறியாமல் பற்றிக் கொண்டு மறுபடி ஆட்டி வைக்கும். ஆசைகளும் அவ்வாறே. எனவே ஆசைகளின் மூலமான 'நான் யார்?' என்பதை ஆராய்ந்து அறிந்து, அதனை அடியோடு அழிக்க வேண்டும்.

ஸ்ரீராமகிருஷ்ணர் மேலும் கூறுகிறார்: "நீ கிருஹஸ்தனாக இருந்தாலும்கூட அதனால் ஒரு கெடுதலும் இல்லை. உனது சித்தம் மட்டும் இடைவிடாது பகவானிடம் நிலையாக இருக்க வேண்டும். ஒரு கையால் உனது வேலையைச் செய்தாலும், மற்றொரு கையால் பகவானது சரணாரவிந்தங்களைப் பற்றிக்கொண்டு இரு. செய்யவேண்டிய காரியம், ஒன்றும் இல்லாதபோது இரு கரங்களாலும் அவரது சரணங்களை ஒருசேரப் பற்றிக் கொள்வாய்.

*குறள் 120: வேண்டுவார் வேண்டும் வகைதான் விரிந்துஎங்கும்*
*காண்டற்கு அரிதாம் சிவம்.*

*பொருள்: பார்ப்பதற்கு அரியதான சிவம் ஞானசித்தி அடைந்தவர்கள் வேண்டியபடி எல்லாம், எல்லா இடத்தில் பரவி நிற்கும்.*

*விளக்கம்: பார்ப்பதற்கும் சிந்திப்பதற்கும் அரியவனான சிவன் எம்மேல் கொண்ட பெருங் கருணையால் எம்முன் வந்து தோன்றுகின்றான் என்பதை மணிவாசகரும் அழகுற விளக்குகிறார்.*

*சிந்தனைக்கும் அரியாய்! எங்கள் முன்வந்து,*
*ஏதங்கள் அறுத்து, எம்மை ஆண்டு, அருள் புரியும்*
*எம்பெருமான் (திருவாசகம், திருப்பள்ளி எழுச்சி-5)*



ஓவியம்: கோவி, சென்னை

என்றும்

***அது, பழச் சுவைஎன, அமுதுஎன; அறிதற்கு***
***அரிது என, எளிதுஎன; அமரரும் அறியார்***
***இது அவன் திருஉரு; இவன், அவன்; எனவே***
***எங்களை ஆண்டுகொண்டு, இங்குஎழுந்து அருளும்,***
***மதுவளர் பொழில்திரு உத்தர கோச***
***மங்கையுள்ளாய் திருப்பெருந்துறை மன்னா!***

***(திருவாசகம், திருப்பள்ளி எழுச்சி-7)***

என்பவையும் ஔவையாரின் குறள்பாவை விளக்குகின்றன.

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மௌனிசாது
## மொழிமாற்றம்: ராம் மோஹன்

### நாள் பொழுதில் அருணாசலம்

*‘அருணாசலம்’ என்பதன் பொருள் பேரொளியே உருவான மலை என்பதாகும். பலநூற்றாண்டுகட்கு நீடித்துவரும் சம்பிரதாயப்படி சிவபெருமானைக் கொண்டாடும் கார்த்திகைத் திருநாளில் ஆசிரமத்தில் இருந்து ஏறத்தாழ ஒரு மைல் தொலைவில் உள்ள அண்ணாமலைச் சிகரத்தில் பிரம்மாண்டமான தீபத்தை ஏராளமான நெய் ஊற்றி ஏற்றுவார்கள். இந்த அருணகிரி, ஒரு தொடர்ச்சி மலையாய் இல்லாமல், தன்னந்தனியாக நிற்பதால் இந்தத் தீப ஒளி பலமைல் விஸ்தீரணத்திற்குக் காணப்படும். ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகைத் திருநாள் பெரும்பாலும் நவம்பர் மாதம் வரும். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்குமுன் சிவபிரான் வானுக்கும் பூமிக்கும் அளாவிய தீபஸ்தம்பமாய் தோன்றியதை இந்த விழா கொண்டாடுகிறது.*

*இது கார்த்திகைத் திருவிழா தொடர்பான ஒரு கதை. உண்மையில் இதனது உள்ளார்ந்த தத்துவம் மிக உயர்ந்த ஒன்றாகும். பகவான் ரமணர் அருணகிரியைப் பரமார்த்தமாகவும் தூலமாகவும் வழிபடுவோர்க்கெல்லாம் முக்தி அளிக்கும் இறைவடிவமாகவும் குறிப்பிடுகிறார். மேலும் நமது ஆத்மாவைப் பிரதிபலிப்பதாகவும் நமது வாழ்வின் குறிக்கோளான ஆத்ம சாட்சாத்காரத்தின் தோற்றமாகவும் இருப்பதாகக் கூறுகிறார்.*

உலகாயத நோக்கில் இருந்து நோக்குங்கால் இது ஒரு வெறும் மலையாகத் தோன்றினாலும், ஆன்மிக நோக்கிலிருந்து பார்க்குங்கால் இது பரமாத்மாவின் வடிவமாகும்.

இங்கு இது தொடர்பான புராணங்களை எல்லாம் என்னால் எடுத்துரைக்க முடியாது. இது குறித்து பகவான் கூறிய சில சுலோகங்களை மட்டுமே இங்கு என்னால் எடுத்துரைக்க முடியும்.

அருணாசலத்தைப் பற்றிய எண்ணம் எழுந்த மாத்திரத்திலேயே, அதன் உருவம் மனக் கண்ணில் தோன்றிய மாத்திரத்திலேயே எண்ண அலைகள் முற்றிலும் ஓய்ந்து விடுகின்றன. அதனை நோக்கி எண்ணத்தைத் திருப்பிய மாத்திரத்திலேயே நாம் உலகப் பற்றுமீது கொண்ட வெற்றியும் அதனுடன் எழும் பூர்ண மன சாந்தியும் மனதில் தழைக்கின்றது.

இந்த உலகம் நிலையற்றது என்பதை அறிந்து இந்த உலகாயத நோக்கினை உதறித் தள்ள விரும்புவோர்க்குக் கைகொடுக்க இவ்வுலகில் அருமருந்து ஒன்று உள்ளது. அந்த அருமருந்து நமது பௌதிக உடலை அழிப்பதில்லை. மாறாக மானுடனின் பொய்ம்மை உருவான அகந்தையை அழிக்கிறது. இதற்குத் தேவை, எண்ணங்களை உண்முகமாக்குவதுதான். இந்த ஆத்மாவானது இந்த அருணாசலத்தன்றி வேறில்லை என்று அறிக. எப்போது ஒருவன் 'நான் யார்?' என்னுடைய மூலம் எது? என்று தன்னுடைய இதயத்தின் ஆழத்தில் மூழ்கி 'நான்' என்பதின் ஆணிவேரைக் கண்டறிகின்றானோ அவன் அப்போதே இந்த அகிலத்தின் தலைவன் ஆகின்றான். அவனே அருணாசலம், ஆனந்த சாகரம் என்று பகவான் பாடுகிறார்.

அருணாசல பதிகத்தில் மீண்டும் பகவான் வியந்து கூறுகிறார், "புதுமை ஒன்றை நான் கண்டேன்! இப்

பருவதம் காந்தம்போல் உயிரினைப் பற்றி இழுத்து ஒருதரம் இதனை மட்டும் சிந்தித்தவர் தமது ஜீவனின் சேட்டையை ஒடுக்கி, அதனைத் தன் உள்முகமாக ஈர்த்து அந்த ஜீவனைத் தன்போல அசலமாகச் செய்து அவரது உயிரையே விழுங்கித் தன்மயமாக்கி ஆத்ம சாட்சாத்காரம் அடையச் செய்கிறது. நமது உயிர்க்கு உயிராய் ஒளிர்கின்ற அருணமாமலையை இடைவிடாமல் சிந்தியுங்கள்.

என்போலவே இந்த அருணகிரியை பரமாத்மாவாக எண்ணி தம் ஜீவபோதம் அழிந்தவர் எத்தனையோ பேர் உள்ளனர். இந்த உலக வாழ்க்கை மீது வெறுப்புற்று இந்த ஜீவிதத்தை நீக்கும் வழியை நாடி அலைபவர்களே தன்னை ஒருமுறை மட்டுமே நினைத்தவர்களைக்கூட அவர்கள் உயிரை நீக்காமலேயே உய்வு அடையச் செய்யும் அருமருந்து ஒன்று இப்பூமியில் உள்ளது ஒன்று அதுவே அருணாசலம் என்று அறிவீர்களாக!" (அருணாசல பதிகம் 10, 11).

பகவானின் இந்த ஞான மொழிகள் ஒரு ஆழ்ந்த பொருள் கொண்டவை. ஆன்ம விடுதலை விழையும் மனப்பூர்வமாக நாமும் சாதகர்க்கு மட்டுமே உபயோகமான வழிமுறையைக் காட்டுபவை. இந்த மந்திர வார்த்தைகள் சாதகர்களின் மாயைத் திரையை நீக்கி அவர்தம் இதயங்களில் அருணாசலத்தின் அபூர்வ ஒளி அவர்கள் இதயங்களில் ஜொலிப்பதைக் காண்பர்.

நம் மனதின் அலைவுகள் அனைத்தும் அருணாசலத் தினால் நிறுத்தப்படுகின்றன என்பதை நான் புரிந்து கொண்டேன். இதனை அனுபவித்தவர்களைத் தவிர ஏனையோருக்கு உணர்த்தல் இயலாது. எனினும் மலைமேல் ஒளிரும் தீபத்தின் அபூர்வமான தோற்றம், இதை பௌதிகக் கண்களால் மற்றும் மனக் கண்களால் பார்க்கும் அனுபவம் அருணாசலத்தை நீங்கி வெகு தூரத்தில் இருக்கும்போதும் அந்த தீபதரிசனத்தை

இதயத்தின் ஆழத்தில் உரைப்பது – இவை அனைத்துமே மன ஒருமைப்பாட்டுக்கு உதவுகின்றன. இதனை நாம் உள்ளார்ந்து உணரும்போது நாம் நமது லட்சியத்தை நோக்கி முன்னேறிக்கொண்டு உள்ளோம் என்பதை உணர்கிறோம்.

இன்று பகவான் கூடத்திற்கு வராததைப் பய்னபடுத்திக்கொண்டு மலையின் சிகரம்வரை ஏறி, அதன் பௌதிகப் பரிமாணங்களை அறிய முடிவு செய்தேன். தட்பவெட்ப நிலையும் இதற்கு சாதகமாய் இருந்தது. ஆகாயத்தின் மேகங்கள் சூழ்ந்து இருந்ததால் வழக்கமான வெப்பம் தெரியவில்லை. இதமான காற்று வீசிக் கொண்டு இருந்ததும் என் முயற்சிக்கு உற்சாகம் அளித்தது. எனினும் இந்த முயற்சி கடினமாகவே இருந்தது. ஏனெனில் சிகரத்திற்கு ஏறும் வழியை நான் அறிந்து இருக்கவில்லை. மலைச் சரிவு மிக ஆழமாகவும், தாவரங்கள் அடர்ந்தும் இருந்தது. இவற்றால் மூடப்பட்ட பாதையே பார்வைக்குத் தெரியவில்லை. தொலைவில் இருந்து பார்க்கும்போது எளிதாகத் தெரிந்த பாதை, உண்மையில் ஏற முயலும்போது மிக்க கடினமாக இருந்தது. தரைமட்டத்திலிருந்து பார்க்கும்போது, ஏறுவதற்கு எளிது என்று நமக்குத் தோற்றமளித்த பாறை, உண்மையில் மேலே ஏறிச் செல்லும்போது கடினமாக இருந்தது. இது எனக்கு மிகச் சிரமத்தைத் தந்தது.

கீழிருந்து மலையைப் பார்க்கும்போது தெரிந்த ஒரு நேர்க்கோட்டைப் பாதையென்று நிர்ணயித்துக் கொண்டு, மேலே ஏறி, ஆசிரமத்திலிருந்தும் திருவண்ணாமலை நகரில் இருந்தும் காணப்பட்ட சிகரத்தை நோக்கி ஏறிச் செல்ல யத்தனித்தேன். 45 டிகிரி கோணத்தில் ஏறிக்கொண்டே இருந்தேன். பாறைகளுக்கு இடையே அடர்த்தியாக மூடியிருந்த புதர்களைத் தாண்டி, பாறை பாறையாகக் குதித்துச் சென்றேன்.

ஏனெனில் பாறைகளுக்கு இடையே பாம்போ, தேளோ மறைந்து இருக்கலாம் அல்லவா?

மேலே ஏறிச் செல்லச்செல்ல விரைவிலேயே நகரமும் உயர்ந்த கோபுரங்களுடன் கூடிய பெரிய கோயிலும் ஆசிரமத்திற்கு அருகே உள்ள பெரிய கட்டிடங்களும் பொம்மைகள்போல் குறுகித் தோற்றமளிக்கத் துவங்கின. அடிவாரத்தில் மேய்ந்து கொண்டிருக்கும் ஆட்டு மந்தைகளும் எறும்புக் கூட்டங்கள் போலத் தோன்றத் துவங்கின.

மேலே ஏறி வருவது கடினமாய் இருந்தது. கீழே இறங்கிச் செல்வது அதைவிடக் கடினமாய் இருக்கும் என்பதை உணர்ந்தேன். ஏனெனில், பல நூற்றாண்டுகளாக மழைப் பொழிவாலும், பெருங்காற்றாலும் தேய்க்கப்பட்டு கால் வைக்கும் பாறைகள் வழவழப்பாக மாறி இருந்தன.

அவற்றின்மீது கால் வைக்கும்போது அவை பிடிமானத்தில் இருந்து விடுபட்டு, கீழே உருண்டு ஓடத் துவங்கின. நாமும் அவற்றுடன் உருண்டு கீழே விழும் அபாயம் இருந்தது.

அரைமணி நேரம் ஏறியபின் வழியில் இருந்த ஒரு பாறையின்மீது அமர்ந்தேன். கீழிருந்து பார்க்கும்போது அந்த மலைப் பாதையின் நீளத்தில் சரிபாதி தூரத்தில் இருப்பதுபோல் தோற்றம் அளித்தது. இப்போது பார்த்தால் நான் ஏற வேண்டிய தூரம், இதுவரை வந்ததைப்போல் இரண்டு மடங்கு இருப்பதை அறிந்தேன். மேலும் இவ்விடத்தில் இருந்து மேலே ஏற வேண்டிய வழியில் அமைந்துள்ள கற்பாறைகள் மிக செங்குத்தாக இருந்தன. நான் வைத்திருந்த ஊன்றுகோல் உதவியுடன் மட்டுமே அவற்றின்மீது ஏறிக் கடக்க முடியாது. ஒரு பெரும்பாறை நான் போக வேண்டிய பாதையில் வழிமறித்துக் கொண்டு நின்றது. அதைத் தாண்டிச் செல்வது இயலாத காரியமாய்த் தோன்றியது.

அந்த மலைச் சிகரத்தை அடைய எளிதான வழியாய்த் தோன்றிய பள்ளத்தாக்கு அருகிலும் இல்லை. அங்கு ஏறிச் செல்லவும் இயலாது. நான் சரியான பாதையில் சென்றுகொண்டு இருக்கவில்லை என்பதை உணர்ந்தேன். திருவண்ணாமலையில் உள்ள ஒரு மருந்துக் கடைக்காரர் கூறிய விஷயம் என் நினைவுக்கு வந்தது. அவர் கூறியதாவது: சிகரத்துக்குச் செல்ல எளிதான வழி சிவன் கோயிலின் அருகே வடக்குப் புறத்தில் செல்வதே. இப்போது அதைக் கண்டறிய மீண்டும் செல்வதற்கு நேரம் இல்லை. நான் எனது சாகசப் பயணத்தைக் கைவிடாமல் முடிக்க வேண்டுமெனில் ஒரே வழிதான் உள்ளது. புதர்கட்கு இடையே செல்லும் கண்பார்வைக்குத் தெரியாத பாதையில் பாறையின் இடது புறத்தை ஒட்டிச் செல்வதுதான். இதுவரை நான் பாறைப் படிகளைத் தேடிக் கொண்டிருந்தேன். அது நேரத்தை நீட்டிக்கும் ஒரு பயனற்ற வேலை என அறிந்தபின், துணிவுடன் முன்னேறிச் செல்ல ஆரம்பித்தேன். ஒரு நாகம் வந்து என்னைத் தீண்டுவதுதான் விதிக்கப்பட்டது எனில், நான் எவ்வளவு ஜாக்கிரதையுடன் இருப்பினும் அதைத் தடுக்க இயலாது. எனவே, எனது கவனத்தை அருணாசலத்தின்மீது முழுமையாக வைத்து ஏறத் துவங்கினேன். ஒரு மணி நேரப் பயணத்தின்பின் மலைச் சிகரத்தை அடைந்தேன்.

தீபம் ஏற்றப்படும் இடத்தை எளிதாக அடையாளம் காண முடிந்தது. ஏனெனில் தீபம் எரிக்கப் பயன்படும் நெய் உண்டாக்கிய கரும் சுவடுகளைக் காண முடிந்தது. அங்கேயே ஒரு பாறையின் மீது அமர்ந்தேன். மஹரிஷி காட்டிய வழியான, எங்ஙனம் நாம் வாழ்வின் பொருண்மை சார்ந்த செயல்பாடுகள் நமது ஆத்மிகத் தேடலுக்கு இடையூறு செய்யாமல் செயல்பட வேண்டும் என்பது நினைவுக்கு வந்தது.

பகவான் கூறுகிறார்: நீங்கள் தலைநிமிர்ந்து நில்லுங்கள். இந்த நிலையற்ற அலைமோதும் வாழ்வுபெறும் கடலைத் தலை குனிந்து நோக்காதீர்கள். மாறாக, நீங்கள் தலைகுனிந்து நோக்குவீர் ஆயின், அது உங்களை அதன் லௌகீகச் சேற்றில் அமிழ்த்தி விடும். தலையை உயர்த்தி ஆன்மிக ஜோதியையே நோக்குங்கள்.

வேறுவிதமாய் இதனையே கூற வேண்டும் எனில் உயர்ந்த நோக்கத்தையே கொண்டிருங்கள். உங்கள் நோக்கம் மிக உயர்ந்ததாக இருக்கட்டும். இந்த உயர்ந்த லட்சியத்தை நீங்கள் செல்ல முயலும்போது கீழுள்ள நோக்கங்கள் அனைத்துமே தானாக நிறைவேறி விடும். நாம் அலைமோதும் புயல்காற்றில் பொங்கும் கடலைக் குனிந்து நோக்கினால் அது நம்மை மூழ்கடித்து விடும். நிமிர்ந்து நில்லுங்கள். ஒன்றேயான அந்தப் பரம்பொருளையே நோக்குங்கள். நீங்கள் வெற்றியடைவது திண்ணம். (மகரிஷி வாய்மொழி).

இந்த மனித சமுதாயம் ஆனந்தத்தையும், பேரொளியையும், புதிய போதனைகளையும் புதிய ஆசான்களையும் எப்போதும் நாடிக்கொண்டு இருக்கின்றது என்பதை தியானத்துக்கொண்டு இருந்தேன். ஆனால் எவ்வளவோ அற்புதமான பேருண்மைகள் அவர்களால் அறியப்படுவதற்காக எதிரே உள்ளது. பெரிய ஐஸ்வர்யங்களான மஹான்களின் உபதேசங்களும், ஞானிகளின் அறிவுரைகளும் மனித குலம் பின்பற்றுவதற்காக நம் முன்னே கொட்டிக் கிடக்கின்றன. அவற்றைக் கற்றறிய ஒரு முழுவாழ்க்கையே போதாது. பார்க்கப்போனால், இவை அனைத்தில் இருந்தும் ஒரே ஒரு உபதேசத்தை மட்டுமே தேர்ந்து எடுத்து, அதை முழுமனத்துடன் அப்யசித்தால் நாம் நேர் வழியில் செலுத்தப்படுவோம்.

# எண்ணில் அடங்குபவன்

## ஏ.வி. ராஜகோபாலன்

அந்த ஆஸ்ரமத்தில் வாரந்தோறும் குருமஹராஜ் என அழைக்கப்படும் அந்த ஞானி சொற்பொழி வாற்றுவார். ஆன்மீகத்தில் ஆர்வம் கொண்ட பலர் அதைக் கேட்க வருவார்கள். அன்று அவர் எடுத்துக் கொண்ட தலைப்பு ‘இறைவன் எண்ணில் அடங்குபவன்’.

அவர் சொன்னார்...

பரம்பொருள் எல்லையற்ற குணங்களைக் கொண்டது. அதைப் பற்றிப் பாடிய அனைவரும் இக்கருத்தில் ஒன்று பட்டவர்கள். இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக, இறைவனின் பெருமை மற்றும் அவனுடைய சர்வேஸ்வரத் தன்மையை மாணிக்கவாசகர் வாக்கில் பார்க்கலாம்.

**எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி**
**விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய், விளங்கு ஒளியாய்,**
**எண் இறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்**
**பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்**

(சிவ புராணம், 22-25)

பொருள்: அவன் புகழைக் கணக்கிடமுடியாது. அவன் ஆகாயம், பூமி, இவற்றில் நிறைந்து இருக்கிறான். அதற்கு அப்பாலும் உள்ளான். சில சமயம் புலனாகிறான். புலன் ஆகாமலும் இருக்கிறான். எங்கும் வியாபித்துள்ளான். அவனை என்னால் அறிய இயலவில்லை.

இதையே புருஷ சூக்தமும் கூறும். 'அவன் ஆயிரம் தலைகளும், ஆயிரம் கண்களும் ஆயிரம் கால்களும் உடையவன். இறையுலகும் விண்ணுலகும் வியாபித்து நம் எண்ணிக்கைக்கு அடங்காதவன்... அவன் நாம் குறிப்பிடும் குணங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவன். (அதோ ஜ்யாயாகுச் ச பூருஷ:).

**சிஷ்யர்கள்:** குருஜி ஒரு சந்தேகம். நீங்கள் சொன்னவற்றை நோக்குங்கால், இறைவனை வருணித்த தமிழ், சம்ஸ்கிருத வேதாந்தங்கள், அவன் எண்ணில் அடங்காதவன் என்ற கருத்தையே முன்வைக்கின்றன என்பதை உணர்கிறோம். ஆனால் உங்கள் தலைப்பு வேறு மாதிரி இருக்கிறதே!

**குரு:** நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் அவற்றை முனைந்து ஆராய்ச்சி செய்யும் சமயத்தில் பலமுறை அவனை எண்ணிற்குள் அடக்கி நாம் அறியும் வண்ணம் விளக்கும் பாங்கையும் பார்க்கிறோம்.

திருமூலர் எண்ணை அடிப்படையாகக் கொண்டு பல தத்துவங்களை விளக்குவார். அவருடைய திருமந்திரத்தின் முதல் பதிகமே (கடவுள் வாழ்த்துப் பகுதி) இறைவன் பலவித எண்ணிக்கையாக விளங்கக் கூடியவன் என்னும் முறையில் அமைந்துள்ளது.

1. ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தான்உணர்ந் தெட்டே

(திருமந்திரம்)

சிவபெருமான் ஒன்றே; ஆயினும் சக்தியுடன் இணைந்து இரண்டாக இன்னருள் புரிகிறான். பிரம்மா விஷ்ணுசிவன் என மூன்றாக உள்ளான். நான்கு

*வேதங்களால் உணரப் படுபவன். ஞானேந்திரியங்கள் ஐந்தையும் வென்றவன் தியாகராசனான அவன். ஆறு ஆதாரங்களில் விரிந்து காணப்படுபவன். ஏழு உலகங்களையும் கடந்து சென்றவன். ஐந்து பூதங்களாகிய நிலம், நீர், வாயு, அக்னி, ஆகாயம் இவற்றுடன் சூரியன், சந்திரன், ஆத்மா என்னும் எட்டுடன் இணைந்தவன்.*

*திருமந்திரம் சைவ சித்தாந்த நூல்களில் தலை சிறந்தது. மிக அற்புதமான முறையில் சிவனை அடைய சீவனுக்கு வழி காட்டும் நூல். இதன் முதல் பாடலே இறைவனின் ஏகத்துவம் என்னும் நிலையைப் பலவிதமாக விவரித்து எட்டு விதங்களில் காட்டுகிறது. இதில் ஒவ்வொறு எண்ணுக்கும் வேறு பல விளக்கங்களும் காணக் கிடைக்கின்றன. மூன்று என்னும் எண்ணிற்கு ஓம் என்னும் பிரணவ மந்திரமும், வேறு சிலரால் முக்குணங்களும் எடுக்கப் படுகின்றன.*

*இது வேதாந்தபரமான ஒரு தமிழ் நூலின் முகப்பு. முழுவதும் சிருங்காரத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு காப்பியத்திலும் அதைப் பார்க்கலாம்.*

*காளிதாசனால் இயற்றப்பட்ட சாகுந்தல நாடகம் உலகப் புகழ் பெற்றது. அதன் கடவுள் வணக்க சுலோகம் பிரசித்தி பெற்றது. அதில் எட்டு அம்சமாக விளங்கும் சிவபெருமான் அனைவரையும் காத்து அருளட்டும் என்று இறைவணக்கத்தை அமைக்கிறான் மகாகவி.*

***ப்ரத்யக்ஷாபி: ப்ரபன்ன: தனுபிரவது வஸ்தாபிரஷ்டாபிரீச: (1.1)***

*இவ்வாறு இருவேறு மொழிகளில் (தமிழ் சம்ஸ்கிருதம்), முற்றிலும் மாறுபட்ட நோக்கம் கொண்ட (தத்துவம்சிருங்காரம்) இருவகை நூல்களில் (கவிதை நாடகம்) ஆரம்பம் ஒரே வகையில் அமைந்துள்ளது நோக்கத் தக்கது.*

## சிவபெருமானின் தோற்றங்கள்:

சிவபெருமானின் நடனங்கள் தாண்டவம் எனப்படும். இவற்றுள் ஏழு வகை பிரதானமாகும். ஊர்த்வ தாண்டவம், ஆனந்த தாண்டவம், திரிபுர தாண்டவம், சம்ஹார தாண்டவம், காளிகா தாண்டவம் போன்றவை அனைவரும் அறிந்தது. புன்சிரிப்பால் செய்யப்பட்ட அவனுடைய திரிபுர தகனம் (முப்புரங்களையும் எரித்தது) அவன் அற்புத மறக்கருணைக்கு எடுத்துக் காட்டு.

அத்தகைய சிவபெருமான் ஈசானம், சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம் என்னும் ஐந்து முகங்களை உடையவன். பதினைந்து கண்களும், பத்து கைகளும், அதில் பத்து வகைப் படைகளும் உடையவன். ஆனால் இத்தகைய அந்த சிவன் என்னும் பெரிய தோற்றம் என் சிறிய நெஞ்சுள் புகுந்து அங்கு எங்கும் நிறைந்து நிற்கின்றது. அவனை உரிமையுடன் 'நம்பி' என்றே அழைக்கிறார் திருமூலர். பாடலைப் பார்ப்போம்.

அஞ்சு முகமுள ஐம்மூன்று கண்ணுள
அஞ்சினொ டுஅஞ்சு கரதலம் தானுள
அஞ்சுடன் அஞ்சா யுதமுள நம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்துநின் றானே. (1736)

## திருமழிசை ஆழ்வார்:

திருமூலரைப் போல வைணவத்தில் திருமழிசைப் பிரான் எண்ணைக் கொண்டு திருமாலின் பெருமையைப் பாடுவதில் வித்தகர். இவரும் திருச்சந்த விருத்தம் என்னும் பாடல் தொகுப்பில் முதல் பாடலிலேயே இந்த முறையைக் கையாள்கிறார்.

பூநிலாய வைந்துமாய்ப் புனற்கண்நின்ற நான்குமாய்,
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்தகா லிரண்டுமாய்,
மீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்,
நீநிலாய வண்ணநின்னை யார்நினைக்க வல்லரே? (752)

இது பஞ்சபூதங்களில் இறைவன் நிறைந்து இருக்கும் பாங்கினை விளக்கும். அவன்,

- ❖ *நிலத்தில்—பஞ்ச இந்திரியங்களின் (ஒளி, ஓசை, சுவை, மணம், தொடு உணர்ச்சி) இயக்கத்துடனும்,*
- ❖ *நீரில்—இவற்றுள் மணம் நீங்கலாக மற்ற நான்காகவும்,*
- ❖ *தீயில்—மணம், சுவை நீங்க மற்ற மூன்றாகவும்,*
- ❖ *காற்றில்—ஓசை, தொடு உணர்ச்சி என்னும் இரண்டாகவும்,*
- ❖ *ஆகாயத்தில்—ஓசை என்னும் ஒன்றாகவும்*

வியாபித்துள்ளான். அத்தகைய எங்கும் நிறைந்த ஈசனை யாரே அறிய வல்லார்? இது அவன் சர்வ வியாபி என்னும் கருத்தை விளக்குகிறது.

மற்றொரு பாடலில் அவனுடைய இந்த குணம் மற்றொரு பரிமாணத்தில் விளக்கப் படுகிறது.

எட்டும் எட்டும் எட்டுமாய் ஏழும் ஏழும் ஏழுமாய்
எட்டு மூன்றும் ஒன்றுமாகி நின்ற ஆதி தேவனை,
எட்டினாய பேதமோடி றைஞ்சிநின்ற வன்பெயர்,
எட்டெழுத்து மோதுவார்கள் வல்லர்வான மாளவே(828)

இதில் மெய்ப் பொருட்கள் 24 ஆகவும்; தீவு, கடல், மலை இவற்றில் ஒவ்வொன்றிலும் ஏழாகவும்; த்வாதச ஆதித்யர்களாகவும்; இவர்களுக்கெல்லாம் உந்து சக்தியாக நாராயணன் விளங்குகிறான்.

அவனை 'ஓம் நமோ நாராயணாய' என்னும் எட்டு எழுத்து மந்திரத்தால் வணங்குபவரே வானுலகத்தை ஆள்வர் என்று திருமழிசையார் விளக்குகிறார். இதன் அடிப்படையில் மேலும் பல சிறப்பான விளக்கங்களை உரையாசிரியர்கள் விவரிக்கின்றனர்.

*எண்களின் தாக்கம்:*

*நம் தத்துவத்தில் இந்த எண்களின் தாக்கம் இறைவனுடன் தொடர்புடைய ஏனையவற்றிற்கும் பொருந்தும்.*

- ❖ *குணங்கள் மூன்று–சத்துவம், ரஜஸ், தமஸ்*
- ❖ *இறைவன்–பக்தன் ஆகியோரின் இணைப்பு சத் (பரம்பொருள்), சித் (ஜீவன்), ஆநந்தம் (சத்சித் ஐக்கியத்தால் கிடைக்கப் பெருவது)*
- ❖ *புருஷார்த்தங்கள் நான்கு–அறம், பொருள், இன்பம், வீடு.*
- ❖ *ஆஸ்ரமங்கள் நான்கு–பிரம்மசர்ய, கிருஹஸ்த, வானப்ரஸ்த, சன்னியாசம்*
- ❖ *புலன்கள் ஐந்து–கண், காது, மூக்கு, நாக்கு, தோல்*
- ❖ *பூதங்கள் ஐந்து–இதை முன்பே பார்த்தோம்*
- ❖ *அவஸ்தைகள் ஐந்து–ஸ்வப்ன, ஜாக்ர, சுஷுப்தி, துரியம், துரியாதீதம்*

*இது மட்டுமா? ஐங்கரன், ஆறுமுகத்தான், ஏழு கன்னிகைகள், அஷ்ட வசுக்கள், நவகிரகங்கள், பத்து திக்குகள், 11 ருத்திரர்கள், 12 ஆதித்யர்கள்&& போதுமா!!! இவை மட்டுமல்ல... இன்னும் பல விதங்களில் அவனை நாம் ஒரு கணக்கில் கொண்டுவர முயற்சி செய்கிறோம்.*

> ***சிஷ்யர்கள்:*** *அதே சமயம் இறைவன் ஒருவனே என்ற கருத்தும் உண்டல்லவா?*
>
> ***குரு:*** *இறைவன் எண்ணிக்கைக்கு அப்பாற் பட்டவன் என்றாலும் அவனை எண்களால் வணங்கிப் போற்றும் அழகிய உத்தியைப் பார்த்தோம். இப்பொழுது அவன் ஒன்றானவன் என்னும் கருத்தை அலசுவோம்.*

*அநாதியான வேதங்களில் இக்கருத்தைப் பல இடங்களில் பார்க்கலாம். 'அவன் ஒருவன். அந்த ஒன்று ஆச்சர்யமானது; மகோன்னதமானது; உக்ரமானது' என்கிறது வேதம் (ய: ஏகோ அஸ்தி தம்சனா மஹான் உக்ரோ அபி வ்ரதை: ருக் 8.1.27) மேலும், அக்னி என்னும் அந்த ஒரு கடவுளே இந்திரன், விஷ்ணு, பிரம்மணஸ்பதி, வருணன், மித்ரன் எனப் பல வடிவங்களில் காட்சி அளிக்கின்றான் (ருக் 2.7) என்னும் விளக்கமும் வருகிறது.*

*இவ்வாறு பலவற்றில் ஒன்று, ஒன்றில் பலவாக பரம்பொருளைக் கண்டது இந்தியாவின் மிகப் பழமையான நூலான ருக் வேதம். இது பல செய்திகளை நமக்கு அளிக்கிறது. ஆழ்வார் பாசுரத்தில், 'நீ எந்த உருவத்தில் அவனைப் பார்க்க விரும்புகிறாயோ, அவன் அவ்வுருவாகிறான். எந்தப் பெயரிட்டாலும் அப்பெயரால் அழைக்க விழைகிறான்' என்னும் விளக்கம் வேதத்தின் தத்துவத்தை அழகு தமிழில் தருகிறது. திருப்பாவைக்கு விளக்கமளிக்கும் சான்றோர்கள், அவனுக்கு 'நாராயணன்' என்னும் (சம்பிரதாயத்தில் மிகவும் போற்றப்படும்) நாமத்தை விட ஆச்சியர் அழைத்த 'கோவிந்தன்' என்னும் நாமமே மிகவும் பிடித்திருந்ததாக சொல்லுவர்.*

*மகாபாரத்தில் அமைந்துள்ள விஷ்ணு சஹஸ்ரநாமம் பக்தி என்னும் வடிவத்தில் பல இடங்களில் ஞானத்தை பேசும். அது அவனுக்கு ஐந்து வடிவம் கொடுக்கிறது.*

*1 ஸ்தவ்ய: – போற்றப்படும் ஈசன்*

*2 ஸ்தவப்ரிய: – பக்தர்களின் துதியை விரும்புபவன்*

*3 ஸ்தோத்ரம் – நாம் சொல்லும் பாடல்கள், தோத்திரங்கள்*

*4 ஸ்துதி: – அவனை வழிபடும் செயல்*

*5 ஸ்தோதா – வழிபடுபவன் (அதாவது நாம்)*

**சிஷ்யர்கள்:** எங்கே ஆரம்பித்து எங்கே வருகிறது?? வழிபடுபவனும், வழிபாடும், அதனால் போற்றப்படும் இறைவனும் எல்லாமே ஒன்று என்பது அற்புதமான கருத்து.

**குரு:** ரொம்ப சரி. இதில் ஒரு விசேஷம் பாருங்கள். எல்லாம் அவனே என்பது நாம் அறிந்ததுதான். அதற்கு மிகப் பெரிய வடிவம் கொடுத்து நம்மையும் அவனுடன் இணைத்து, பலவற்றில் ஒன்றாக வியாபித்திருக்கும் அவனை கண்முன்னர் கொண்டு நிறுத்தி விடுகிறது. இந்த விளக்கத்தில் அத்வைதமும், த்வைதமும் மிக எளிதாக, இயல்பாக, நாம் உணரும் வடிவில் இணைகின்றன. தத்துவம் என்பது புரியாத ஒன்று என்னும் மேற்படியிலிருந்து அதை மிகவும் எளிதாக்கித் தருகின்றனர் நம் முன்னோர்.

இத்தகைய தத்ததுவத்தை ஆண்பால், பெண்பால் என்று அழைப்பதைக் கூட வேதம் ஏற்பதில்லை. பெரும்பாலும் **அது** என்றே வேத முதல்வன் அழைக்கப் படுகிறான்.

ஏகம் சத், பஹுதா வதந்தி (ருக் 1.164)

அந்த ஒன்றைப் பல வடிவில் காண்கின்றனர். இந்தக் கருத்து அதர்வண வேதத்திலும் மற்ற வேதங்களிலும் பல முறை வருவது இதற்கு வலுவூட்டுகிறது. இதை மிகவும் தெளிவாக, சந்தேகத்திற்கு இடமின்றி கீழ்க்கண்ட அதர்வண வேத மந்திரம் விளக்கும்.

எவன் இந்தக் கடவுளை ஒன்றென அறிவானோ அவனுக்கு

அது இரண்டாகவோ, மூன்றாகவோ, நான்காகவோ, இருக்காது

அது ஐந்தாகவோ, ஆறாகவோ ஏழாகவோ இருக்காது

அது எட்டாகவோ ஒன்பதாகவோ பத்தாகவோ இருக்காது. (அதர்வணம் 3.4)

எதற்கு இந்த அளவு நீட்டல்? ஒன்றுக்குமேல் இல்லை என்று சொல்லிவிட்டுப் போகலாம் அல்லவா? வேதங்கள் சுருங்கக் கூறி விளங்க வைப்பதில் ஈடு இணை அற்றவை என்பது அல்லவா உண்மை.

காரணம் இருக்கிறது. அக்காலத்திலும் இக்காலத்திலும் பல வடிவங்களில் கடவுளை நாம் கண்டோம். வேள்விகள் முக்கியத்துவம் பெற்ற காலத்தில் இந்திரன், அக்னி, சூர்யன், சோமன், மித்ரன், பிரம்மணஸ்பதி, வருணன், அர்யமா போன்ற பல தெய்வங்களைக் குறித்து ஆஹுதி இடப்பட்டன. பின்னர், பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் மும்மூர்த்திகளின் வழிபாடு பழக்கத்திற்கு வந்தது. ஆனால் இந்த எல்லா தெய்வங்களும் ஒன்றே என்னும் கருத்தை வேதங்கள் அன்றே ஆணித்தரமாக ஐயத்திற்கு இடமின்றி மிக மிகத் தெளிவாக பறைசாற்றிவிட்டன.

ஒருவன் மட்டுமே:

மேலே சொன்ன அதர்வண வேதத்தின் அடுத்த வரிகளைப் பார்ப்போம்.

ஸ ஏவ ஏக, ஏகவ்ருத், ஏக ஏவ
ஸர்வே அஸ்மின் தேவா ஏகவ்ருதோ பவந்தி

அவனே ஒருவனானவன்; அவன் ஒருவன் மட்டுமே. அனைத்து தேவர்களும் அங்கு ஒன்றாகச் சங்கமிக்கின்றன.

மொழிபெயர்க்க இயலாத அற்புத தத்துவம்:

இந்த அடிப்படையில்தான் நாம் பிரம்மத்தைக் கண்டோம், காண்கிறோம். அவனுக்கு எத்தனை நாமம் உருவம் குணம் வேண்டுமானாலும் அளிக்கலாம். ஆனால் அவன் அந்தந்த வடிவில் நம்மை ஏற்றுக்கொள்கிறான். இதனால்தான் இதை ஒரு மதம், ஒரு தெய்வம், ஒரு வழிபாடு என்னும் வட்டத்திற்குள் அடைக்க இயலவில்லை. இது அனைத்து

வழிபாடுகளையும் ஏற்கிறது. இக்கருத்தை மேலும் வலியுருத்துகிறது கீழ்க்காணும் வரிகள்

*அவனிடம் அனைத்தும் இணைகின்றன*
*அவனிடமிருந்து அனைத்தும் பிரிகின்றன*
*அவன் நம் நாட்டவன்; அவனே அயல் நாட்டவன்*
*அவன் இறைவன்; அவனே மனிதன்*

*(அதர்வணம் 4.16)*

என்ன ஆழம் பொதிந்த ஒரு தத்துவம். உலகம் யாவும் ஓர் குலம், ஓர் இனம் என்னும் சங்க இலக்கிய வருணனையின் வேத வடிவாக இதைக் காண்கிறோம். யாதும் ஊரே, யாவரும் கேளீர் – என்னும் கணியன் பூங்குன்றனாரின் புகழ் பெற்ற வரிகள் நம் மனதில் பளிச்சென்று தெறிக்கின்றன.

ஸ்வேதாச்வதரோபநிஷதம்:

ஸ்வேதாச்வதரோபநிஷதம் அவனை 'ஒருவனே' என்று தீர்மானித்து அவனுடைய சர்வ ஈஸ்வரத்வம் என்னும் குணத்தை அழகுபட காட்டுகிறது (6.11) . இதில் வரும் சொற்கள் நம் பயன்பாட்டில் இருக்கும், நமக்கு நன்கு பரிச்சயமான வார்த்தைகள் என்பதால், அவற்றைப் பதவுரை மூலமாக அநுபவிக்கலாம்.

- ஏக: தேவ: இறைவன் ஒருவனே – அவன்
- சர்வ பூதேஷு கூட: – அனைத்து உயிரிலும் மறைந்திருப்பவன்
- சர்வ வ்யாபி – எங்கும் நிறைந்தவன்
- சர்வ பூத அந்தராத்மா – படைப்புகள் அனைத்திலும் உள்ளூறைபவன்
- கர்மாத்யக்ஷ: – நம் செயலனைத்தையும் காண்பவன்
- சர்வபூதாதிவாச: – படைக்கப்பட்ட அனைத்திற்கும் அவனே உறைவிடம்

- *சாக்ஷி– கண்காணிப்பவன்*
- *கேவல: – தனி ஒருவன்*
- *நிர்குண; – குணங்களற்றவன்*

*அவனைப் பலவித எண்ணிக்கைகளுக்குள் கட்டுப் படுத்த முயற்சி செய்தோம். கடைசியில் அவன் ஒருவனே என்றுதான் முடிவு கட்ட முடிகிறது.*

*அதுகூட சரியில்லையோ! அவன்தான் நான் என்னும் 'அஹம் ப்ரம்மோஸ்மி' கண்ணோட்டத்தில் பார்த்தால் அந்த 'அவன்' தொலைந்து போகிறான். மிஞ்சுவது நாமும் நமக்குள் உறையும் அந்த பிரம்மமும்தான்.*

*இந்த ஆசாமியைத்தான் நாம் வெளியில் தேடித் திரிந்தோமோ இத்தனை காலம்?*

## ரமணோதயம்
## Voluntary Services

| | |
|---|---|
| K. சுரேஷ் ஜானகிராமன் | 9444127770 |
| ராஜேஷ் M.S. | 9840075778 |

## தொடரும் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| *A கமலா, சென்னை* | *₹3000* |
| *T ஜெயராமன், வடபழனி* | *₹3000* |
| *சங்கரன், கோவை* | *₹925* |

## பௌர்ணமி நாட்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *மே* | 25 | *புதன்* | *இரவு 8.29* | 26 | *வியாழன்* | *மாலை 4.43* |
| *ஜுன்* | 24 | *வியாழன்* | *அதிகாலை 3.32* | 25 | *வெள்ளி* | *மதியம் 12.09* |
| *ஜுலை* | 23 | *வெள்ளி* | *காலை 10.43* | 24 | *சனி* | *காலை 8.06* |
| *ஆகஸ்டு* | 21 | *சனி* | *இரவு 7.00* | 22 | *ஞாயிறு* | *மாலை 5.31* |

# முருகனார் நோக்கில் முழுமுதற் கடவுள்

**உரைஞர்: ரமணசுந்தர்ராஜன்**

*ஆண்டவன் விழி:*

*உள்நோக்குமாறு என்னைக் கண் நோக்கலுற்ற அருள்*
*விண்ணோக்கம் பெம்மான் விழி.*

*(ஸ்ரீ ரமண ஞான போதம், முதல் பாகம்-179)*

*(கண்ணோக்கலுற்ற பெம்மான் விழி அருள் கண்ணோக்கம் என்க)*

*பகவானின் அருள்திருப் பார்வையைப் பற்றி 1000 பாடல்களேனும் முருகனார் பாடியிருப்பார். ஆயினும் அவர் திருப்தி அடைந்திருக்க மாட்டார். பகவானின் பார்வை வானத்திலும் உயர்ந்தது. வெற்று வெளிப் பார்வை, அருளைப் பரப்பும் ஆனந்த அருள் வெளிப் பார்வை, அருள் விண்ணோக்கப் பார்வை என்று குறிப்பிடுகிறார் முருகனார்.*

*முருகனார் இவ்வளவு ஆனந்தப்பட எப்படி பகவான் பார்த்தார்? வெளியே நோக்காதே. உள்ளே நோக்கு என்று பார்வையாலேயே பகவான் முருகனாருக்குக் கட்டளையிட்டார். முருகனார் அப்படியே கடைப் பிடித்தார். முமுக்ஷுக்கள் அடையும் ஆனந்தத்தை முழுமையாக அனுபவித்தார்.*

*பகவானைப் பார்க்கும்போதெல்லாம் உள்முகம் பார்க்க★ வேண்டும் என்ற உண்மையை★ மனத்தில் கொள்வோம்.*

*மெய்த்தவம்:*

*ஆண்டவனை எண்ணி அகம்குழை மெய் அன்பு அன்றி*
*வேண்டல் எவன் வேறு தவம்.* *(ஸ்ரீ ரஞாபோ, 1-202)*

*தவம் என்றால் உடலையும் மனத்தையும் தவிக்கச் செய்வது தான் என்று நாம் புரிந்து வைத்திருக்கிறோம். பகவான் கூட, தவம் புரிந்தார் என்கிறார்கள். பகவான், அண்ணாமலையாரை அடைவதுதான் தன் லட்சியம் என்று தீர்மானித்து, திருவண்ணாமலையை அடைந்த பிறகு, 'உன் இஷ்டம் என் இஷ்டம்' என்று தன் உடல், பொருள், ஆவியை அண்ணாமலையாருக்கு அர்ப்பணித்து விட்டார். அண்ணாமவையாரும், தன் பிள்ளை ரமணனுக்கு உயிர் வாழத் தேவையான உணவை அளித்தார். அண்ணாமலையை அகத்தில் வைத்து, அன்பு குழைய, அகமே அண்ணாமலையாய் ஆனந்தமாய், கண்மூடி அமர்ந்திருந்தார். தவமோ, தியானமோ எதுவும் செய்யவில்லை. அண்ணாமலையாரோடு ஒன்றாய், தன்மயமாய் நின்றார். தானான பகவான் சில ஆண்டுகளுக்குப் பிறகு, பேசிச் செயல் பட்டார்.*

*நாமும் எந்தத் தவமும் செய்ய வேண்டாம். பகவானையே, அவரது அருளையே, அன்பையே, நம்மைக் காக்கும் தன்மையையே எண்ணிஎண்ணி மனத்தில் உண்மையான அன்பு கொண்டு, பகவானே நீ மட்டும் வேண்டும் என்று வேண்டி நிற்பதைத் தவிர, வேறு எந்தத் தவமும் செய்ய வேண்டாம். அதுவே பெரும் தவம் என்கிறார் முருகனார்.*

*பகவானை நினைத்தல் தவம்; அவனிடம் அன்பு கொண்டு உருகுவது தவம். இதைவிட எளிய தவம் வேறு என்ன இருக்கிறது?*

***சூழ்நிலையோடு ஒன்றித் துளங்கல் இல்லை தன்சொருப***
***வாழ்விலே ஊன்றும் மனம். (ஸ்ரீ ரஞாபோ, 1-448)***

*ரமண பக்தர்கள் மனப்பாடம் செய்து வாழ்வில் பழக வேண்டிய ஒரு பாடல் இது*

*'எது நேரினும் சரி; எது வரினும் சரி'. இந்த வசனத்தை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்..*

எது நேரினும் சரி என்பதற்கு ஒரு பொருள்: எது வேண்டுமானாலும் நடக்கட்டும், அதனை ஏற்றுக் கொள்கிறேன் என்பது. மற்றொரு பொருள்: எது நடந்தாலும் பகவான் சரியாகத்தான் நடத்துகிறார்; எல்லாம் பகவானுக்குத் தெரியும். எல்வாமே என் நன்மைக்காகத்தான் பகவான் நடத்துகிறார் என்பதில் 200% திட நம்பிக்கை கொள்வது.

சுற்றி நடப்பது எதையும் கண்டு கொள்ளக்கூடாது.நம் வேலை எதுவோ அதிலேயே கவனத்தைச் செலுத்தினால் போதும். சூழ்நிலை இப்படி இருக்கிறதே என்று கலங்க வேண்டாம். எல்லாவற்றையும் பகவானிடம் ஒப்புவித்து விட்டு, எதுவும் என் செயலில்லை என்ற மனோபாவத்துடன் எப்போதும், நடப்பதை ஏற்று வாழ்வதே சொருப வாழ்வில் ஊன்றிய மனமாகும்.

சொருப வாழ்வில் ஊன்றிய மனம், சுகமயமாய், அமைதிமயமாய் அமையும்.

சித்தம் சிவம்:

சித்தமாத் தோன்றுவது சித்தே என விளங்கும்
சித்தத்தின் மெய் தேர்வுறில். (ஸ்ரீ ரஞாபோ, 1-469)

இதுவும் ஒரு முக்கியமான பாடல்.

அந்தக்கரணம் என்று அழைக்கப்படும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவை குறித்துக் குழப்பமடைய வேண்டாம். இந்த நான்கையும் மனம் என்ற ஒன்றாகக் கொள்ளுங்கள் என்கிறார் பகவான். எனவே சித்தம் என்பதும் மனம் என்பதும் ஒன்று என்று கொண்டு மேலே செல்வோம்.

இந்தச் சித்தம் அல்லது மனம் என்பது உலக விஷயங்களில் ஈடுபட்டுக் கொண்டு ஒரு வரையறைக்கு உட்பட்டு விளங்குவது. விசார மார்க்கத்தாலோ அல்லது சரணாகதியாலோ உலக விவகார மனமே இல்லாமல்

ஆகும்போது சுத்த சத்வ மனமே நம்மில் விளங்கும். இதுவே சித் எனப்படும் பேரறிவு ஆகும்.

சித்தமே சித்தாக ஆகும் இந்த நிலை தான் ஞான நிலை. ஞானியின் சொல்லும் செயலும் சித்தான இறைவனின் சொல்லும் செயலுமாகத் துலங்கும் எனவே சாதாரண மனத்தை இறைவனிடம் ஒப்படைத்து மனமே இல்லாமல் வாழ்வது தான் சித்தாகிய இறைவனாய் வாழ்வது.

சித்தத்தையும் சித்தையும் அழகாக விளக்கியுள்ளார் முருகனார்.

மனத்தைத் துணைகொள்ளாமல் பகவான் விட்ட வழி என்று வாழுங்கள் என்பது இந்தப் பாடலில் முருகனாரின் அனுபவ உபதேசம்

**எனக்கு என்னும் ஈன எண்ணம்**
**எனக்கு எனக்கு என்று எண்ணும் அவ் ஈனப்பசாச**
**மனக்கலக்கம் பொல்லா மயல்.** *(ஸ்ரீ ரஞாபோ, 1-508)*

முருகனார், மானுடம் வெல்ல வேண்டும் மாண்புறு தெய்வீகமாக வேண்டும் என்பதற்காகப் பேய்த்தனமாகப் பாடல்கள் பாடிக் குவித்தார் போலும். பிச்சைக்காரன் முதல் பெரிய்ய்ய பணக்காரன் வரை எப்போதும் நினைப்பது, ‘எனக்கு எனக்கு எனக்கு’ என்பதுதான். எனக்கு என்று எண்ணுவது பேய்த்தனம்; பேய்மனக்கலக்கம்; பொல்லாத பேய் அகந்தையின் விருப்பம் என்று, மனைவி, வீடு, பொருள், பதவி, புகழ், கௌரவம் முதலிய எல்லாவற்றையும் துறந்த முருகனார் சாடுகிறார்.

உனக்கு என்று பிராரப்தத்தால் ஒதுக்கப்பட்டது உன்னை நிச்சயம் வந்து அடையும். ஏற்று மகிழ்வாய். எப்போது கிடைக்கும் என்ற ஆவலும், எனக்குக் கிடைக்காதா என்ற ஏக்கமும் கூடாது என்பது பகவானின் உபதேசம்.

*என்னதான் உபதேசம் கேட்டாலும் 'எனக்கு' என்ற எண்ணம் நம்மை விடவே விடாது. எப்படித் தப்பிக்கலாம்?*

*எனக்கு என்று தோன்றும் எண்ணத்தை, (பொருளை, செயலை) அந்த விநாடியே பிடியுங்கள். உண்மையிலேயே எனக்கு இது தேவையா என்று யோசியுங்கள். 80% எனக்குத் தேவையில்லை என்று தான் முடிவாகும். 20% தேவைப்படுவதை, தீவிரமாக ஆலோசிக்கும்போது, தேவையில்லை என்று நீங்கள் தீர்ப்பிடலாம். இல்லை இது நிச்சயமாக எனக்குத் தேவை என்று நினைப்பதை நிச்சயம் ஒருநாள் அடைவீர்கள்.'*

*அதுவரை 'எனக்கு' என்ற எண்ணத்தை விலக்குங்கள்.*

*ஒருநாள் வரும். அன்று புன்னகையோடு சொல்வீர்கள், எனக்கு என்று எதுவும் கிடையாது. வேண்டவும் வேண்டாம்.★*

*அருளையே வேண்டுவர் ஆன்றோர் தம்மில் அவ்*
*அருளும் பொருளும் இகன்றால். (ஸ்ரீ ரஞாபோ, 1-647)*

*இறைவன் ரமணனின் அருள் எங்கும் எல்லோர்க்கும் கிடைக்கக் கூடிய பெருநிதி. இறைவன் ரமணன் தம்மிடம் வந்து, "உங்களுக்கு அருள் வேண்டுமா, பொருள் வேண்டுமா, ஏதாவது ஒன்றுதான் கொடுக்கப்படும்" என்று கேட்டால், அருளே போதும். பொருள் வேண்டாம் என்று சான்றோர்கள் முடிவெடுப்பார்களாம். பொருள் கிடைத்தால் துன்பம் அதிகம். அந்தப் பொருளைக் காபந்து செய்வது பெரும் துன்பம். நாம் ரமண சக்கரவர்த்தியின் பிள்ளைகள். அப்பா எனக்கு இவ்வளவு பணம் தேவை என்று கேட்டால், உண்மையாக எவ்வளவு தேவையோ அதனை அளிக்க ஏற்பாடு செய்வார். அருள் இருந்தால் எல்லாம் கிடைத்த மாதிரிதான். பயம் போகும்;*

அறியாமை விலகும். உண்மை அருள் என்பது இறைவனின் அறிவு ஒளி. அருள் கிடைத்தால் நம் பாவம் போகும். அருளால் இறை அனுபவங்கள் ஏற்படும். அருள் மனக் கோட்டைகளைத் தகர்க்கும். இறைவனின் அருளை எண்ணி அடங்கி ஒடுங்கி இருந்தால் உள்ளம் உறுதி பெறும். அருள் மலரும். அருள் கிடைத்தால் பரமனே கிடைத்தாற் போல்தான்.


"அருளால் பரமனே கிடைத்தான். என் உண்மை சொரூபத்தை நான் அடைந்தேன். அதனால் எனக்கு அருளே போதும்" என்று தீர்மானிக்கிறார் முருகனார்.

*(ஸ்ரீ ரமண ஞான போதம் முதல் பாகம் 644–658 ஆம் பாடல்களுக்கான திரண்ட கருத்து)*

**சுய சொரூபமே கடவுள்:**

**கடவுளரை எல்லாம் கடந்து விளங்கு உண்மைக்**
**கடவுள் சுயசொருபம் காண்.** *(ஸ்ரீ ரஞாபோ, 1-957)*

முருகனாரை ஏன் பகவான் தேர்ந்தெடுத்தார் என்று யோசித்துப் பார்க்கிறேன். ஏனென்றால் பகவான், "நெருப்பில் விழுவீர்" என்றால் கொஞ்சமும் தயங்காமல் விழுந்து விடுபவர் முருகனார். அவருக்கு வேதம் வேண்டாம், சாஸ்திரம் வேண்டாம், சம்பிரதாயம் வேண்டாம், சடங்குகள் வேண்டாம், கொள்கைகள் வேண்டாம். ரமணன் மட்டும், ரமணன் மட்டுமே வேண்டும். முருகனார் ரமணனார் தான். அப்படியே ரமணனை உள் வாங்கி, உண்டு, ரமணனார் ஆனவர். முருகனாருக்கு, கடவுள் எல்லாம் முக்கியமல்ல. எல்லாக் கடவுளையும் கடந்து விளங்கும் உண்மைக் கடவுள் ரமணன் தான் முக்கியம். ரமணனை ரமணன் என்ற கடவுளாக முருகனார் நேசிக்கவில்லை. ரமணன் என்பது சொரூபம்; ரமணனின் வடிவம், சொல், செயல் எல்லாம் சொரூப லக்ஷணம். சொரூபமே தானாய் விளங்கும் ரமண மூர்த்தி, சொரூபத்தைக் காண் என்று



பகவானுக்கு அருகில் அமர்ந்திருப்பவர் முருகனார்

நமக்குக் காட்டியும் கொடுக்கிறார். கடவுளர் இல்லை, ரமணன் இல்லை. உன்னுள், உன்னில், நீயே அதுவாய் விளங்கும் சொரூபமாவாய் என்று உபதேசித்தும், காட்டியும், சொரூபமாகவே முருகனாரை உணர வைத்து, ரமணானந்தக் கடலில் மூழ்க வைத்த ரமணனை அன்றி வேறு எந்தக் கடவுளை வணங்குவது என்று பகவானை வணங்கி அமைகிறார் முருகனார்.

முருகனாரைப் படித்து, பயின்று சொரூபத்திலேயே நிலைப்போமாக.

(தொடரும்)

# சப்ரிஜிஸ்திரார் நாராயண அய்யர்

## (நிறைவுப்பகுதி)

### நிரஞ்சன்

*அருணை என்று எண்ண யான் அருட் கண்ணி பட்டேன்*
*உன் அருள்வலை தப்புமோ அருணாசலா*

*– அக்ஷரமணமாலை, 102*

நாராயண அய்யர், பேராசிரியர் சுப்பராமையா, தேவராஜ முதலியார் போன்றவர்கள் பகவான் மீது கொண்ட பிரேமையால் பகவானை விட்டு மனதால் அகலாத கவனம் கொண்டவராய் இருந்தனர். அது மட்டும் அல்லாது பகவானிடம் கொண்ட அன்பின் மிகுதியினால் தங்குதடையின்றி சரளமாய்ப் பகவானிடம் பேசும் இயல்பு கொண்டவராய் இருந்தனர். சொருபமே மனித உருவெடுத்து வந்தது என்று பகவானை அறிந்திருந்தும் பகவானிடம் தங்களது அன்றாட பிரச்சினைகளில் இருந்து அரிய ஆன்மீக விஷயங்கள் வரை அனைத்தைப் பற்றியும் கேள்விகள் கேட்டு பகவானின் கனிவான பதில்களைப் பெற்றவர்கள்.

பகவான் முன்னமே குறிப்பிட்டதுபோல் பழம்பிறவிகளில் செய்த புண்ணிய பலத்தினால் அவர்கள் குருவருள் கிடைத்தற்கு உரியவராயினர். மேலும் ஜென்மாதி நட்டம் எழ கன்மாதி கட்டு அவிழ, ஆன்மசாக்ஷாத்கார சாதனையில் வழிப்படுத்தும் பகவானின் உபதேசத்தை உள்வாங்கிப் பயிற்சி செய்யும் பக்குவத்தை இப்பிறவியில் பகவானது சன்னிதி மகிமையினால் சிறப்பாகப் பெற்ற சிரேஷ்டிரர்கள்.

*பகவானை அவதாரங்களுக்கு எல்லாம் மேலாகிய ஞான சொருபமாகப் பார்த்தவர் தேவராஜ முதலியார். திருப்பதிக்குச் செல்வதற்கு சேமித்த பணத்தை பகவானின் சன்னிதி அடைவதற்குச் செலவழித்து விடுகின்றார். சுப்பராமையா தந்தைபோல் பகவானைக் கண்டு, தனது இல்லற நிகழ்ச்சிகளின் சோதனைகள் அனைத்திற்கும் பகவானிடம் சிறு குழந்தைபோல் முறையிட்டு ஒருமுறை அழுதும் பகவானின் அருளைப் பெற்றிருக்கின்றார். நாராயண அய்யர் பகவானை பரம்பொருளே என்றும் சிற்சொருபமே என்றும் திடமான உறுதி பூண்டிருந்தார்.*

*நாராயண அய்யர் மனைவி மக்களுடன் இல்லறத்தைக் கைக்கொண்டு ஒழுகுபவர். ஆதலால் நெடு நேர தியானம் பிராணாயாமம் ஆன்மவிசாரம் முதலிய மார்க்கங்களில் அவரால் முழுமனதோடு ஈடுபட முடியவில்லை. பல பிறவிகளில் செய்த புண்ணியத்தால் கிடைத்தற்கு அரிய குருவானவர் கிட்டியும் அவரால் குரு பரிந்துரைக்கும் ஆன்மவிசார சாதனையில் ஏக சிந்தனையோடு ஈடுபடமுடியவில்லை. ஆதலால் அவர் மிகவும் மனம் வருந்தினார். பகவானின் மேன்மையினை நன்கு உணர்ந்த அவர் பகவானால் இப்பிறவியில் தன்னை உய்வித்துக் கொள்ளமுடியாது போமாயின் தன் கதி என்ன ஆகும் என்று கலங்கினார்.*

***கருணையால் என்னை ஆண்டநீ எனக்குஉன்***
***காட்சிதந்து அருளிலை என்றால்***
***இருள்நலி உலகில் ஏங்கியே பதைத்துஇவ்***
***உடல்விடில் என்கதி என்னாம்?***

*என்று அருணாசல பதிகத்தில் பகவான் அருணாசலத்திடம் தன்னை முழுதும் ஒப்படைத்துக் கொண்ட பக்தனாய் முறையீடு செய்துகொள்கின்றனர் அன்றோ? அது நம் பொருட்டு அன்றோ? உத்தம பக்தன் அஞ்ஞானத்தைப் போக்கிக்கொள்ள குரு அருளுக்காக*

*ஏங்கித் தவிக்கும் நிலையே அது. அந்நிலையிலேயே பதைத்து இருந்தனர் அய்யர்.*

*தன்னால் எந்த ஒரு சாதனையையும் முழுமையாகச் செய்ய முடியவில்லையே என்று பகவானிடம் சொல்லி மிகவும் வருந்தி நின்றனர். பகவான் அப்பொழுது கனிவோடு கண்ணோக்கி ஆறுதலாக திருவாய் மலர்ந்து பின்வருமாறு உபதேசிக்கின்றனர்: 'உள்ளது நாற்பது' பாடல்கள் தெரியும் அல்லவா? அவற்றைத் தினந்தோறும் கிடைத்த வேளைகளிலெல்லாம் சொல்லிக்கொண்டே இருங்கள். இப்படிச் சொல்லிக் கொண்டே வந்தால் பாடல்களின் வரிகள் சொற்கள் எல்லாம் மறைந்து, பாம்பு ஒன்று தனது சட்டையைக் கழற்றிக்கொண்டு வெளிவருவதுபோல், உண்மை தானாய் வெளிவரும், என்றனர். இப்படிப்பட்ட எளிய மார்க்கத்தை பகவான் அய்யருக்கு மட்டும் போதிக்கவில்லை; தீவிர ஆன்மவிசாரத்தில் ஈடுபடவும் முடியாமல், மனஒடுக்கத்தைச் சாதிக்கவும் முடியாமல் கலங்கும் எண்ணிறந்த பக்தர்களுக்கு பகவான் இந்த மிக எளிய மார்க்கத்தைப் பரிந்து உரைக்கின்றனர். இது மனதில் கொள்ளவேண்டியது.*

*ஆன்மவிசார சாதனை என்பது பொய்யாம் அகந்தையின் பொய்யாம் அஞ்ஞானத்தைப் பொய்யாக்குவதும், மெய்யாம் (ஜீவ) சொருப ஞானத்தை மெய்யாக்குவதும் ஆகும். முடிவில்லாதது போல் நீண்டுகொண்டிருக்கும் ஜனனமரணத் தொடரை முடிவிற்குக் கொண்டுவந்து அகந்தையைப் பூரண இருப்பு அறிவு இன்பமாகிய சொருபத்தில் உருக்கரையச் செய்துவிடும் ஒரு பெரும் சாதனை ஆகும். ஆதலால் ஆன்ம விசார சாதனை என்பது அதிதீவிர பக்குவிகளுக்கு உரியதே. எனினும் யார் ஒருவர் பகவானின்பால் ஈர்க்கப்படுகின்றனரோ அவர்கள் ஞான சித்திக்கு உரியர் என்பதே திண்ணம்.*

ஒருமுறை பகவான், யார் ஒருவர் ஒருமுறை இங்கு வந்தனராயின் பின்னர் அவர்கள் எங்கே சென்றாலும் அவர்களுடைய இறுதியில் இங்கேதான் வருவர், என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர். இதன் பொருள் என்னவெனில், ஆன்மசாக்ஷாத்காரமே முதலும் முடிவுமான நிலை. அனைத்துச் சாதனைகளும் இறுதியில் ஆன்ம சாக்ஷாத்காரத்திலேயே முடிந்து முழுமை அடைகின்றன என்பதே. பகவான் நம்மை இட்டுச்செல்வது இகபர போகசித்திகளுக்காக அன்று. அநித்தியத்திலிருந்து நித்தியத்திலும், தன் அறிவின்மையினின்று தன் அறிவிலும், அல்ப சுகங்களில் இருந்து பூரண இருப்பு அறிவு இன்பமாகிய நமது சொருபத்திலும் நம்மை மீட்டு நிலைப்படுத்துவதே அவரது சன்னிதியின் சிறப்பு. ஞானமே குருவடிவாயினவர் அவர்.

அய்யர் அக்கணத்திலிருந்து உள்ளது நாற்பதின் பாடல்களைச் சொல்லிக்கொண்டே இருப்பதைச் சாதனையாக்கிக் கொண்டார். அதிகாலையில் பால்காரர் பால் கொண்டுவரும் வேளையில் வீட்டிற்கு வெளியே வரும் அய்யர் உள்ளது நாற்பதைச் சொல்லிக்கொண்டே வெளிவருவார். நேரம் சரியாக ஐந்து மணி ஆகி இருக்கும். எதிர் வீட்டு அம்மாள் அவரது உள்ளது நாற்பது பாடல் ஒலி கேட்டு நேரம் சரியாக ஐந்து மணி என்று தனது கடிகாரத்தைச் சரிசெய்துகொள்ளும் அளவிற்குத் தினந்தோறும் காலம் தவறாது அய்யரின் குரல் காலை ஐந்து மணியிலிருந்து ஒலிக்க ஆரம்பிக்கும். அவர் என்ன வேலை செய்துகொண்டிருந்தாலும் பாடல்கள் தாமாக வெளிவந்து கொண்டே இருக்கும். நாள் முழுதும் கிடைத்த நேரங்களில் எல்லாம் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்கும். உண்மை அவர் வாழ்வில் வெளிவராமலா போகும்?

எவ்வாறு அதிதீவிர பக்தரான சிவப்பிரகாசம் பிள்ளை தனது மனப் போராட்டங்களுக்கு முடிவு கொண்டுவர

முடியாமல் கலங்கிக் கண்ணீர் மல்கி, தன்னை இழிந்தவர் அனைவரினும் இழிந்தவனாகப் பழித்து, தன்னை இப்பிறவியில் பொய்க்காது உய்விக்கவேண்டும் என்றும் பகவானே கதி என்றும் பாடிப்பணிகின்றார்? ஆம். அஞ்ஞானத்தையும் அகந்தையையும் மாயையையும் மலத்தையும் வெல்லுதல் என்பது ஒரு பெரும் போர். நிர்விஷய சுத்த மனதும் குருவருளுமே அப்போரில் ஜீவனுக்கு வெற்றியைத் தரவல்லவை. அப்போரில் குருவருளால் சிவப்பிரகாசம் பிள்ளை வெற்றி கண்டார். அவரது மறைவின்பொழுது பகவான், சிவப்பிரகாசம் பிள்ளை சிவப்பிரகாசம் ஆனார், என்று வாய் மலர்ந்து அப்பெரியாரின் விதேகமுக்தியைச் சிறப்பித்தனர். இதை நினைவு கொள்ளுதல் நலம்.

ஆன்ம ஞானத்தையே கொடுக்கும் குருவானவர் சற்சீடனின் லௌகிக இடர்களைக் களையாமலா விட்டுவிடுவார்? நாராயண அய்யர் வசதியானவர் தான். இருந்தும் ஒரு காலகட்டத்தில் அவரும் சோதனைக்கு உள்ளானார். அவரது மகளின் திருமணத்தை நிச்சயம் செய்யும் நிகழ்ச்சி நிகழவிருந்த நேரத்தில் அதற்கான சடங்குகளைச் செய்வதற்கு வேண்டிய பணம் அவரிடம் இல்லாது போயிற்று. பகவானிடம் அவரும் அவரது மனைவியும் சென்று முறையிட அவர்களது மனம் ஒப்பவில்லை. இருவரும் ஆசிரமம் சென்றனர். பகவானை வணங்கினர். மானசீகமாக பகவானிடம் வேண்டிக்கொண்டு திரும்பினர். அடுத்த நாள் காலையில் அவர்களுக்கு அஞ்சலில் பணம் வந்து சேர்கின்றது. அகமதாபாத்திலிருந்து ஒருவர் ஐம்பது ரூபாய் அனுப்பி இருந்தார். கடிதம் பின்னால் வருகின்றது என்கின்ற குறிப்பு மட்டும் அவர்களுக்குக் கிடைத்தது குருவருளே இது என்று இருவரும் உணர்ந்தனர். நிச்சயதார்த்தம் நன்கு நிறைவேறியது. கடிதமும் அகமதாபாத்திலிருந்து வந்தது. அதில் பக்தர் ஒருவர் இவ்வாறு எழுதி இருந்தார். எனது கனவில் பகவான் தோன்றி உங்களுக்கு

*அந்தப் பணத்தை தந்தி வழியாக அனுப்பிவைக்குமாறு பணித்தனர். மேலும் உங்களது விலாசத்தையும் அவரே தந்தனர். உங்களை எனக்குத் தெரியாது. என்ன காரணத்திற்காக இந்தப் பணத்தை அனுப்புகிறேன் என்றும் எனக்குத் தெரியாது என்று பகவானின் பக்தர் குறிப்பிட்டிருந்தார். அய்யரும் அவரது மனைவியாரும் மெய் சிலிர்த்துப் போயினர். அவர்கள் பகவானது அருள் நாடிச் சென்றனர். நடந்ததை விவரித்தனர். கண்கள் நீர் மல்கின. அந்தக் கடித்தைப் படித்தனர் பகவான். பின்னர் அய்யர் தம்பதியினரிடம், “உங்களுக்கு ஓர் இக்கட்டு என்றால் என்னிடம் சொல்லலாமே. ஏன் தவிர்த்துவிட்டீர்கள்?” என்று அன்போடு கேட்டனர். ஆன்ம ஞானத்தையே கொடுக்கும் குருவருள் சற்சீடனின் லௌகிக இடர்ப்பாடுகளை நீக்கமலா போய்விடும் என்று பகவான் குருவருளால் ஆற்ற இயலாதது ஒன்றும் இல்லை என்று வேறு ஓர் இடத்தில் உறுதிபடத் தெரிவிக்கின்றனர். கேளாது அளிக்கும் உன் கேடு இல் புகழ் என்றும் குருவருளைச் சிறப்பிக்கின்றார். உட்பொருள் ஆய்ந்து விளங்கிக் கொள்ளத் தக்கது.*

*சிலர் இந்தத் தூல உடலையே நித்தியம் என்று எண்ணிக் கொள்கின்றார்கள். ஒரு காலத்தில் இந்த உடல் மறைந்து விடும். அப்பொழுது பெரிதும் துக்கம் அடைவார்கள். அநித்தியத்தை அநித்தியம் என்று விவேகித்து நித்தியத்தை அடைய ஒவ்வொரு கணமும் ஜீவன் முயலவேண்டும் என்று பகவான் வலியுறுத்தி வந்தனர். பகவானையே கதி என்று சார்ந்த பக்தர்களும் பக்குவ நிலையில் பல தரப்பட்டவர்களாய் இருந்தனர். பகவானின் மகா நிர்வாண கால கட்டத்தில் பலர் சொல்லொணாத் துயரம் உற்றனர். மனம் கலங்கி நின்றனர். பகவானோ சிற்கண்ணாய் சர்வ சாக்ஷியாய் விளங்கிவந்தார். அதே சமயம் புற்று நோயின் கடுமையான தாக்கத்தையும், வலியையும், செய்யப்படுகின்ற அறுவை சிகிச்சையையும், அதன்*

பக்கவிளைவுகளையும், நோயின் இயல்பேயான கொடூரத்தையும், உடலில் ஏற்று அனுபவிக்கும் நிலையிலும் அனுபவியாத மோனத்திலும், பக்தர்களுக்கு ஞானியின் தன்மை இன்னதென்று உணர்வதற்கு அப்பாற்பட்டது என்பதைச் சொல்லாமல் சொல்லும் சகஜ சமாதிலேயே நிலைத்திருந்தார்.

அய்யரும் சுப்பராமைய்யாவும் ஒருமுறை பகவானின் உதவியாளரின் இசைவினால் உள்ளே சென்று தலையைக் கூடத் திருப்பிப் பார்க்கமுடியாத, முற்றிலும் உயிர்ச்சத்து வற்றிவிட்ட, பகவானின் தூல உடலைக் கண்டு பதறிப் போயினர். பகவான் "என்ன வேண்டும்?" என வினவ சுப்பராமைய்யா 'அபயம்' என்று கண்ணீர் மல்கப் பிரார்த்திக்கின்றார். அப்பொழுது அய்யரும் சுப்பராமையாவின் கையுடன் தனது கையையும் கோர்த்துக்கொண்டு மனதில் அபயத்தையே வேண்டி நின்றார். பொறிவாயில் ஐந்து அவித்த புண்ணியன் கொடுத்தேன் என்று வரம் அளித்தனன். எப்படிப்பட்ட கொடை!

எவ்வளவு கோடி கொடுத்தாலும் வாங்கமுடியாதது அபயம். அபயம், நிராசை, ஞானம், முக்தி, துக்க நிவிர்த்தி, எல்லாமே ஒரு பொருட்பன்மொழிகளே. உயிர் வலி காந்த பருவதத்தின் முன் வேண்டவேண்டியதை வேண்டிவிட்டனர் சற்சீடர் இருவரும். அருணமாகிரியின் வாக்கு பொய்க்குமோ?

பகவானின் மகாசமாதி அன்று, இரவில் வானத்தில் தோன்றிய ஜோதி மறைந்ததைக் கண்ணுற்ற அய்யர் துக்கத்தால் தன் வயம் இழந்தார். ஓடினார் ஆசிரமத்திற்கு. சாதாரணமாகச் செல்லும் வழியில் பக்தர்கள் நிறைந்திருந்தனர். மேலும் யாரும் மகா நிர்வாண அறையை நெருங்க அனுமதிக்கப்படாத நிலை. அய்யர் சுற்றுச் சுவரில் ஏறி உள்ளே குதித்து மகாநிர்வாண அறையை நோக்கி விரைந்து அறைக்குள்

நுழைந்தார். வாடி வற்றி எலும்பும் தோலுமாய் கிடந்த அருணாசலனின் தூல உடல் கண்டு பொறாது சிறுபிள்ளைபோல் தன் வயம் இழந்து அலறினார். தாங்கொணாத துக்கம் மேலிட்டு அதிர்ந்து போனார். அங்கேயே தங்கிவிட்டார்.

பகவானது பொன் உடலை நீராட்டி நீறு பூசி இடைத்துணி கட்டி வலம் வர ஆயத்தம் ஆயினர். அவர்கள் பகவானைப் பல்லக்கில் வைத்து வலம் வரத் தயாராயினர். அங்கேயே இருந்துவந்த அய்யர் மகா நிர்வாண அறையில் கிடந்த பகவானது கமண்டலத்தையும் கைத் தடியையும் எடுத்துக் கொண்டு பல்லக்கின் முன் வந்து நின்றுகொண்டார். பகவானது திருவடிவு வலமாய் எடுத்துவரப்பட்டு இப்பொழுது மகாலிங்கேஸ்வரர் இருக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தது.

அங்கே ஏற்கெனவே தரையைத் தோண்டி அமைக்கப் பட்டிருந்த, தளத்தில் பகவானது பொன்னுடல் மெதுவாக இறக்கி அமர்த்தப்பட்டது. அச் சமயம் அய்யர் அந்தக் கட்டமைப்பிற்கு உள்ளே இறங்கி பகவானது கைத் தடியையும் கமண்டலத்தையும் பக்கத்திற்கு ஒன்றாக வைத்து, பகவானை விட்டுப் பிரியாத அச்சின்னங்கள் இரண்டினையும் பகவானிடமே சேர்ப்பித்துவிட்டார்.

அதன் பிறகு அய்யர் வழக்கம்போல் ஆசிரத்திற்கு நாள்தோறும் வருவார். பகவானது திருத் தலங்களை வணங்கி வருவார். ‘உள்ளது நாற்பது’ அவரது மனதிலும் நாவிலும் விடாது ஒலித்துக் கொண்டுதான் இருந்தது. நீண்ட காலம் ஆசிரமத்திற்கு அருகில் உள்ள வளாகத்திலேயே வசித்து வந்த அய்யர் தம்பதியர் வயோதிகத்தின் காரணமாக சென்னை சென்று தங்களது பிள்ளைகளுடன் வாழ்ந்துவரலாயினர்.

# ஆதிசிவன் தாள்பணிந்து

**சியாம் சங்கர்**

01. ஆதி சிவன் தாள் பணிந்து சரண் அடைவோமே
பாதியுடல் உமை அன்னை பாதம் கொள்வோமே!

02. கூடி நின்று அவன் நாமம் பாடி களிப்போமே
ஓடி ஆடி அவன் தாள்கள் நாடி செல்வோமே

03. நீறு பூசி பதிகம் பாடி பேறு பெறுவோமே
ஆறுமுகன் அன்னை தந்தை விழியில் வைப்போமே

04. ஏழு ஒன்பது நாயன்மாரைப் போற்றி நிற்போமே
ஆழி உலகம் அவன் ரூபம் கண்டு மகிழ்வோமே

05. அஞ்செழுத்து மந்திரத்தை நெஞ்சில் வைப்போமே
தஞ்சமடைந்து பிணிகடந்து முக்தி கொள்வோமே !

06. சிவன் இரவு மலர் தூவி கண் மலர்வோமே
அவன் நாமம் ஆயிரம் பாடி அருளடைவோமே!

07. பித்தம் யாவும் களைந்தெடுத்து சித்தமுடன் வாழ
பித்தன் பிறை சூடனை நித்தம் தொழுவோமே !

# ரமண மையங்களை நோக்கி...

## திருவரங்கமும் திருச்சுழி ரமணரும் - 1

*பகவானது அன்பர் சாது ஓம் அவர்கள் அடிக்கடி கூறும் வார்த்தைகள் அவ்வப்பொழுது ஞாபகத்திற்கு வந்து செல்லும். அதாவது "பூக்கள் எங்கிருந்தாலும், வண்டுகள் தானாகவே தேடிவரும் என்றைக்கும் வண்டைத் தேடிப் பூக்கள் செல்லாது." ஆனால் இதைச் சற்று வித்தியாசமாகச் செய்து வருகிறார் திருச்சி ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த ஒரு ரமண பக்தர். திருவண்ணாமலையில் கிடைத்த ஒரு பூச்செடியைக் ('ஸ்ரீ ரமண ஞான போதம்' புத்தகம்) கொண்டு ஸ்ரீரங்கத்திற்கு எடுத்துவந்து நட்டு காவிரி நீரையூற்றி அதில் கிடைக்கும் பூக்களைக்கொண்டு அழகாக சிறுசிறு மாலைகளாக கோர்த்து உலகெங்கும் இருக்கும் ரமண அன்பர்கள் பயனளிக்கும் விதமாக 20 பக்கங்களைக் கொண்ட புத்தகமாகப் பல ஆண்டுகளாக வெளியிட்டு வருகிறார். அதாவது தற்போது திரைப்படங்கள் திரையரங்குகளில் வெளியாவதற்கு முன்னால் Teaser & Trailer வெளியாவதுபோல, ஸ்ரீ ரமண ஞானபோதத்தில் இருந்து சில பாடல்களைத் தேர்ந்தெடுத்து அதற்குத் தகுந்த தலைப்பில் பாடல்களைப் பதம் பிரித்து, வரிசைப்படுத்தி அதற்கு ஒரு சிறிய குறிப்புரையுடன் வெளியிட்டு வருகிறார். இந்தச் சிறு புத்தகத்தைப் படிக்கத் தொடங்கியவுடன் மூலநூலைத் தேடிப் போகத் தொடங்குகின்றனர் அன்பர்கள் என்று கூறினால் மிகையாகாது.*

*'ரமணம்' என்ற தலைப்பில் வழுவழு வெள்ளை நிற அட்டையில் பகவான் ரமணர் மற்றும் முருகனாரின் படங்களுடன் பல புத்தகக் குவியல்களுக்கு மத்தியில் கிடந்தால் கூட நம்மைக் கையில் எடுத்து படிக்கத்*

*தூண்டுகிறது 'ஞான போதம்' என்னும் ரோஜாவின் இந்தச் சிறு இதழ். யார் இந்த ரமண பக்தர்? எதற்காக இவ்வாறு செய்கிறார் என்ற கேள்விகளுடன் அவரைச் சந்திக்க சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் 9-ஆம் தேதி பகவான் அவதரித்த ஒரு புண்ணிய புனர்வசு நாளில் எங்களின் பயணத்தை மதுரையிலிருந்து திருச்சியை நோக்கித் தொடங்கினோம்.*

*பேருந்தை விட்டு இறங்கி அவரது இல்லத்தை நோக்கி நடக்கத் தொடங்கியவுடன் அங்கிருக்கும் ராகவேந்திர ஸ்வாமி கோவிலில் கட்டுக்கடங்காத கூட்டத்தை கண்டவுடன் தான் நம் நினைவுக்கு வந்தது அன்றைய தினம் வியாழக்கிழமை என்று! குருவாரம், புனர்வசு நட்சத்திரம். ஒரு உன்னத ரமண பக்தரைத் தரிசிக்க இதைவிட அருமையான சந்தர்ப்பம் கிடைக்குமா என்று தெரியவில்லை. அவரின் அப்பார்ட்மெண்ட் காவலாளியிடம், ஐயா! "இங்கு திரு.சுந்தர்ராஜன் என்பவரைப் பார்ப்பதற்காக வந்துள்ளோம்" என்று கூறியவுடன் அவர் ஒரு நிமிடம் யோசித்து "இங்கு 2 நபர்கள் அந்தப் பேரில் உள்ளனர்" என்று கூறினார். பிளாட் எண்ணைக் கூறியவுடனே, "ஓ! இந்த ரமண மஹரிஷி புத்தகம் எல்லாம் போடுவாரே நம்ம ராகவன் தம்பி!" என்று கூறிக் கொண்டிருக்கும்போதே நம்மை அழைத்துச் செல்ல வந்துவிட்டார் முருகனாரையே முழுநேரமும் சுவாசித்துக் கொண்டிருக்கும் பல ரமண பக்தர்களுள் ஒருவரான திரு. சுந்தர்ராஜன் அவர்கள். எங்களை அவர் இல்லத்திற்கு அழைத்துச் செல்கிறார் வாசற்படியை நாம் அடைந்தவுடனே வீட்டினுள் நேராக பகவான் பத்மாசனமிட்டு அமர்ந்திருக்கும் புகைப்படம் நம்மை வரவேற்கிறது. வீட்டினுள்ளே அலமாரியில் குவியல் குவியலாக புத்தகங்கள் ஒருபுறமும் மற்றொருபுறம் அடுத்து வெளிவரவிருக்கும் அவரின் ரமணம் 8 புத்தகத்தின் Proof Reading செய்யப்பட்ட நகல் பதிப்பும்*

உள்ளது. வழக்கம்போல நம் கேள்வியிலிருந்தே ஆரம்பித்தோம் எப்படி சார் பகவானிடம் வந்தீர்கள் என்று ?

ரமண பக்தர் திரு.சுந்தர்ராஜன், எவ்வாறு பகவானிடம் வந்தார் என்பதைக் கூறத் தொடங்கினார்.

சிறுவயதில் நாங்கள் இருந்த பகுதிக்கு அருகே ஒரு மயானம் இருந்தது. இறுதி ஊர்வலத்துடன் வரும் பறையொலியும் சங்கு சத்தமும் என்னை வெகுவாக பாதித்தது. மேலும் அவர்களைப்போல ஒருநாள் இறந்து போவேனோ என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. வைணவ சம்பிரதாயத்தில் பிறந்ததினால் பெருமாள் பாடல்களைப் பாடினால் நாம் இறக்காமல் நேராக வைகுண்டம் போய்ச் சேர்வோம் என்று ஒருவித நம்பிக்கை எனக்குள்ளே தோன்றி ஆழ்வார் பாசுரமும், பெருமாளின் நாமமும் சொல்லிக்கொண்டே இருந்தேன். அப்படித்தான் இந்தக் கடவுள் பக்தி சிறுவயதிலிருந்தே ஆரம்பித்தது. தமிழ் மொழி மேல் இருந்த அளவிடமுடியாத காதலினால் சுந்தர்ராஜன் என்ற பெயரை எழில்மன்னன் என்று மாற்றியே பல கட்டுரைகள் எழுதி வந்தேன். கல்லூரியிலும் M.A. தமிழில்தான் பட்டம் பெற்றேன். மேலும் மகாகவி பாரதியிடம் மேலிருந்த அன்பினால் பாரதிபுத்திரன் என்று பெயரிலும் கட்டுரைகள் எழுதி வந்தேன். பாரதி கூறும் பெரிய கடவுள் காக்க வேண்டும் என்ற வாக்கியத்திற்கு இணங்க பெருமாள்தான் அந்த பெரிய கடவுள் என்று எண்ணி தொடர்ந்து வழிபட்டு வந்தேன். ஒன்பதாம் வகுப்பு படிக்கும்போது குமரகுருபரர் மீனாக்ஷி அம்மன் மீது பாடிய பாடல்களை மிகவும் விரும்பிப் படிப்பேன். திருச்சி அகிலாண்டம்மன் சந்நிதியில் போய் தினந்தோறும் பாடிக் கொண்டிருப்பேன். குறிப்பாக அவரின் ‘தொடுக்கும் கடவுள்....’ என்ற பாடலை விரும்பிப் பாடுவேன்.

அப்போதெல்லாம் மிகவும் கஷ்டமான காலம் (1992-1995). மதுரையிலிருந்து அப்பளம் வரவழைத்து பெங்களூரில் விற்றுப் பிழைப்பு ஓடிக் கொண்டிருந்தது. எங்களின் உழைப்பைப் பார்த்து ஒரு பிரபல சமையல் எண்ணை நிறுவனமே மதுரையில் எங்களை ஏஜென்ஸி எடுத்த நடத்தக்கூறி முன்வந்தனர். அப்பளம் விஷயமாக, மதுரை செல்லும் போதெல்லாம், மீனாட்சி கோவிலுக்கு செல்வது வழக்கம். நான் தீவிர வைணவனாக இருந்ததனால், மீனாட்சி, பெருமாளின் சகோதரி என்ற புராணக் கதைகளையெல்லாம் மனத்தில்கொண்டு, பெருமாள் என் தந்தை ஆதலால் மீனாட்சி அம்மன் என் அத்தை என்று எண்ணித்தான் வணங்கச்செல்வேன். எப்போதாவது சிவபெருமான் சந்நிதிக்குச் செல்வேன்.

ஒருமுறை, மதுரையில் இருந்து அப்பள மூட்டைகளைச் சுமந்து, என் பெற்றோர் வசித்து வந்த திருச்சி கிராப்பட்டி வீட்டை இரவு 2 மணி அளவில் அடைந்தேன். வீட்டினுள் நுழைந்து நடு ஹாலில் அமர்ந்து, ஜன்னலைச் சட்டென்று பார்த்தபோது, அங்கே கையில் சூலத்தோடு சக்தி நிற்பதுபோல் தோன்றியது. இதெல்லாம் வெறும் தோற்றம் என்று எண்ணிச் சும்மா இருந்துவிட்டேன்.

அதன்பிறகு மதுரையில் கோவிலுக்குச் செல்லும்போது மீனாட்சி அம்மன் சந்நிதியின் அர்த்த மண்டபத்திலிருந்து தரிசனம் செய்ய ரூ.10/ டிக்கெட் வாங்கிக்கொண்டு, மிக அருகில் அம்மனை தரிசிப்பேன். (இப்போதெல்லாம் இது சாத்தியமேயில்லை). இப்படி நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தபோது திடீரென்று என் மனைவிக்கு வயிற்றில் ஒரு கட்டியிருப்பது தெரியவந்தது. அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றினால் கர்ப்பப்பையையும் சேர்த்து எடுக்க வேண்டிய சூழல் ஏற்படும் என்று மருத்துவர்கள் கூறியதை அடுத்து மீனாட்சி அம்மனிடம் சென்று முறையிட்டேன்.

*அப்போது அங்கிருந்த அர்ச்சகர் ஆரத்தி காட்டிவிட்டு வரும்பொழுது தட்டில் மல்லிகைப் பூவும், ரோஜாப் பூவும் இருந்தது. அதைக்கண்ட நான் மீனாட்சி அம்மனிடம், "நீ எனக்கு ரோஜா பூக்கொடுத்தால் என் மனைவி பூரண குணமடைவாள். மல்லிகைப் பூ வந்தால் நீ தான் காக்க வேண்டும் (அப்போது பகவானைப் பற்றியோ அவரின் போதனைகளைப் பற்றியோ தெரியாத காலகட்டம். பின்னர் சாது ஓம் சுவாமிகள் இதனை விஷய பக்தி என்று கூறுவதையும் படித்துள்ளேன்) என்று மனதளவில் எண்ணிக் கொண்டிருக்கும்போதே அர்ச்சகர் மல்லிகையை எடுத்து பின்னர் உடனே அதை வைத்துவிட்டு ரோஜாவை எடுத்துக் கொடுத்தார். சிறிது நாட்களுக்குப் பின்னால் என் மனைவிக்கு XRay எடுத்துப் பார்த்தபோது அவள் வயிற்றில் எந்த விதக் கட்டியும் இல்லை என்று மருத்துவர்கள் என்னை வியப்பில் ஆழ்த்தினார்கள். ஓ! அங்கு அகிலாண்டம்மாவிடம் பாடிய பாடல்கள் இங்கு மதுரை மீனாக்ஷிக்குக் கேட்டிருக்கிறது. அது சரி, இரண்டு பேரும் வெவ்வேறா என்ன! இப்படியாக நாட்கள் சென்று கொண்டிருக்க, ஒருநாள், அப்பளத்துக்குப் பெயர்பெற்ற கல்லிடைக்குறிச்சி (திருநெல்வேலி அருகிலுள்ள சிறிய ஊர்) சென்று, மதுரைக்குத் திரும்பியபோது மணி அதிகாலை 4 இருக்கும் வாசலில் இறங்கி, முகம் கழுவிக்கொண்டு உள்ளே சென்றேன்.*

*அம்மனை வழிபட்டுவிட்டு சுவாமி சந்நிதியை தரிசனம் செய்யாமல் திரும்பிவந்து கொண்டிருந்த எனக்கு அந்த நாள் ஒரு திருப்புமுனையாக அமையப் போகிறதென்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. அம்மன் சந்நிதி திறக்கும்போது மணி அதிகாலை 5.15 இருக்கும். எப்போதும்போல் அம்மனை வழிபட்டபோது சொக்கநாதர் சந்நிதிக்குச் சென்றால் ஒரு செய்தி கிடைக்கும் என்று அம்மன் கூறுவதுபோல்*

தோன்றியது. உடனே சுவாமி சன்னதிக்கு விரைந்தேன். சுவாமி சந்நிதிக்குள் நுழைந்தபோது, இந்தக் கோயிலில் 64 திருவிளையாடல்கள் நடந்தது உண்மையென்றால் இன்று ஏதாயினும் ஒரு அதிசயம் நடக்க வேண்டும் என்று வேண்டியவாறே உள்ளே சென்றேன். அங்கே லிங்கத்தின் பீடத்தில் ஒரு வேடன் உட்கார்ந்திருப்பது போல் தோன்றியது. வேடனாக அமர்ந்துள்ள இறைவன், வெளியில் சொற்பொழிவு நடக்கிறது, போய்க்கேள் என்று சொல்வது போல் உணர்ந்தேன். சொற்பொழிவு பொற்றாமரைக்குளத்தருகே நடக்கிறது. மணி 6 ஆகிவிட்டது. சொற்பொழிவு முடிந்துவிடுமோ என்று பயந்தவாறே திரும்பவும் அம்மன் சந்நிதிக்கு அருகே ஓடிவந்தேன். சொற்பொழிவாளர் கதை சொல்லிக் கொண்டிருக்கிறார். என்ன கதை தெரியுமா ? நான் படும் கஷ்டங்களை, வரிக்கு வரி எனது வாழ்க்கைச் சம்பவங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அழுது தீர்த்தேன். முடிவில், “உங்கள் துயரம் நீங்க ஒரு மந்திரம் உள்ளது. அந்த மந்திரம் அடங்கிய புத்தகத்தைச் சொற்பொழிவு முடிந்ததும் என்னிடம் வந்து பெற்றுக் கொள்ளுங்கள்” என்றார். சொற்பொழிவாளரிடம் சென்று புத்தகத்தைக் கேட்டேன். “ஐயா! என்னிடம் இருந்த எல்லாப் புத்தகமும் தீர்ந்து போய்விட்டது. தயவுகூர்ந்து மாலை வேளையில் வந்து வாங்கிக்கொள்ளுங்களேன்” என்றார். “என்னால் அவ்வளவு நேரமெல்லாம் காத்திருக்க முடியாது. எப்படியாவது இப்போதே ஒரு புத்தகம் கொடுத்துவிடுங்கள். நான் ஊருக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்” என்று கூறினேன். அம்மன் கருணையினால் அவரிடம் எப்படியோ ஒரு கையடக்க புத்தகம் மட்டும் மீதமிருந்தது. அதில் இந்த மந்திரம் இரண்டுமுறை அச்சாகி இருந்தது.

அந்த மந்திரம் ‘ம்ருத்யுஞ்ஜய மந்திரம்’ என்றும், சிவபெருமானின் பக்தர்கள் மிகவும் போற்றும் மிக உயர்ந்த மந்திரம் என்றும் பிறகு தெரிந்து கொண்டேன்.

சொற்பொழிவாளர் அன்று பேசியது திருவிளையாடல் புராணத்தில் உள்ள 'கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலம்' புத்தகத்தை வாங்கிக்கொண்டு கோவிலின் வெளியே வருகிறேன். அன்று கரிக்குருவிக்கு உபதேசம் செய்த படலத்தை முன்னிட்டு சொக்கநாதர் ஊர்வலமாகப் புறப்பட்டு வெளிவந்தார். அந்த கரிக்குருவிதான் நான் என்று எண்ணி என் (பயணத்தை)த் தொடர்ந்தேன்.

பொருளும் புரியாமல் மந்திரத்தின் மதிப்பும் தெரியாமல், அம்மை சொன்னாள்; என் அத்தை சொன்னாள் என்று இந்த மந்திரத்தைச் சொல்லிச் சொல்லி நான் பிறந்ததன் பயனை அடைந்து விட்டேன். இந்த மந்திரம்தான் என்னை ஸ்ரீ ரமண பகவானிடம் சேர்த்தது.

(தொடரும்)

# இனிவரும் திருநாட்கள்

## 2021

| | | | |
|---|---|---|---|
| மே | 9 | ஞாயிறு | பகவான் 71-வது ஆராதனை |
| ஜூன் | 3 | வியாழன் | மஹாபூஜை |
| | 22 | செவ்வாய் | பசு லட்சுமி தினம் |
| ஜூலை | 24 | சனி | குரு பூர்ணிமா |
| செப்டம்பர் | 1 | புதன் | அருணை விஜய தினம் |
| அக்டோபர் | 7 | வியாழன் | நவராத்திரி விழா தொடக்கம் |
| | 14 | வியாழன் | சரஸ்வதி பூஜை |
| | 15 | வெள்ளி | விஜயதசமி |

# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

### மஹா சிவராத்திரி

*ஆதிஅரு ணாசலப்பேர் அற்புதலிங் கத்துருக்கொள்*
*ஆதிநாள் மார்கழியில் ஆதிரையச் – சோதியெழும்*
*ஈசனைமால் முன்அமரர் ஏத்திவழி பட்டநாள்*
*மாசிசிவ ராத்திரியா மற்று.*

*பொருள்:*

*ஆதி லிங்கமாகிய அருணாசலம் என்ற பெரிய அற்புதமான சிவலிங்கத்தின் உருவத்தை ஈசன் மேற்கொண்ட புராதன நாள் மார்கழி மாதத்தின் திருவாதிரை நாளாகும். அந்த அருணாசல ஜோதி ஸ்தம்பத்திலிருந்து மூர்த்தி ரூபமாக வெளிப்பட்ட சிவபிரானைத் திருமால் முதலான தேவர்கள் அனைவரும் போற்றி வழிபட்ட நாள் மாசி மாதத்து (கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி தினமான) மஹா சிவராத்திரி தினமாகும்.*

*இப்புனிதமான மஹா சிவராத்திரி வழிபாடு ஆச்ரமத்தில் 11.3.2021 வியாழக்கிழமையன்று நான்கு கால அபிஷேகங்கள் மற்றும் பூஜைகளுடன் இரவு முழுவதும் சிறப்பாக நடைபெற்றது.*

*இந்த மஹா சிவராத்திரி நன்னாளில் அருணாசலத்தில் அடியார்கள் இரவு முழுவதும் கண்விழித்து கிரிவலம் செய்தனர். ஆச்ரமத்திலும் அன்பர்கள் பலபேர் கண் விழித்து பூஜையில் பங்கு கொண்டனர். மாலை 5 மணிமுதல் காலை 5 மணிவரை ஆச்ரம YouTube-இல் மஹா சிவராத்திரி நேரலையாக ஒளிபரப்பப்பட்டது.*

### ஸ்ரீ வித்யா ஹோமம்

*ஒவ்வொரு ஆண்டும் பங்குனி மாதம் முதல் வெள்ளிக் கிழமையன்று ஸ்ரீ ரமணாச்ரமத்தில் ஸ்ரீ வித்யா ஹோமம் நடைபெற்று வருகின்றது. இவ்வாண்டு 19.3.2021 அன்று*

*வெள்ளிக்கிழமை இந்த ஹோமம் மிகவும் எளிய முறையில் நடந்தேறியது.*

*மாத்ருபூதேஸ்வரர் சந்நிதி வெளிப்புற வளாகத்தில் (New Hall) காலை சுமார் 5.30 மணிக்குத் துவங்கிய ஹோம பூஜை நிகழ்வுகள், 10 மணிவரை நடைபெற்றன. பூர்ணாஹூதி மற்றும் தீபாராதனை நடைபெற்ற பின்னர் கலசங்களில் தீர்த்தங்கள் கொண்டு செல்லப்பட்டு பகவான் மற்றும் தாயார் ஆலயங்களில் அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது. மிகக் குறைந்த எண்ணிக்கையிலான பக்தர்கள் பங்குகொண்ட இந்த ஹோமத்தில் சமூக இடைவெளியும் முகக் கவசம் அணிதலும் கடைப் பிடிக்கப்பட்டன.*

## ஸ்ரீ ரமணாஸ்ரம தரிசன நேரங்கள்

*கொரோனா நோய்த்தோற்று ஊரடங்கு தளர்வுகளுக்குப்பின், குறிப்பிட்ட நேரங்கள் மட்டும் பக்தர்கள் தரிசனத்திற்காக அனுமதிக்கப் படுகின்றனர். அதன்படி காலை 8.00 மணியிலிருந்து 11.00 வரையிலும், மதியம் 3.00 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையிலும் பக்தர்கள் அனுமதிக்கப்படுவர். மாஸ்க் அணிதலும் சமூக இடைவெளியும் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. நித்ய பூஜைகள், பாராயணம் மற்றும் தமிழ்ப் பாராயணம் வழக்கம்போல் நடைபெற்று வருகிறது.*

## ஸ்ரீ ரமணாஸ்ரம தமிழ்ப் பாராயணம் நேரலை

*கொரோனா நோய்த்தோற்று முழுவதும் நீங்காத இந்த சூழ்நிலையில் ஆச்ரமத்திற்கு வர இயலாத உலகெங்கிலும் உள்ள அன்பர்கள் நலன் கருதி ஸ்ரீ ரமணாஸ்ரம தமிழ்ப் பாராயணம் திங்கள், புதன் மற்றும் சனிக்கிழமைகளில் மாலை 6 மணிமுதல் 7 மணி வரை நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகின்றது.*

*கீழ்க்கண்ட இணைப்பின் வாயிலாக ஆச்ரம தமிழ்ப் பாராயணத்தை அன்பர்கள் கண்டு பயன்பெறலாம்.*

*<https://www.youtube.com/c/sriramanasramam/live>.*

*மேலும் ஆச்ரம நிகழ்வுகள் மற்றும் விழாக்கள் இவற்றை நேரடி ஒளிபரப்பில் முன்கூட்டியே அறிந்து காண, ஆச்ரம YOUTUBE CHANNEL-க்கு SUBSCRIBE செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

*<https://www.youtube.com/c/sriramanasramam?sub_confirmation=1>.*

## ரமண கேந்திர செய்திகள்

*ரமண கேந்திரம், மைலாப்பூர் மற்றும் ரமணாலயம், குரோம்பேட்டை ஆகிய ரமண மையங்கள் காலை 8 மணி முதல் மதியம் 1 மணிவரை பக்தர்கள் தரிசனத்திற்காக திறந்திருக்கும். மற்றும் மாலை 6.30 மணியளவில் தமிழ்ப் பாராயணம் நடைபெறும். அதிகபட்சமாக 30 நிமிடங்களுக்கு மேல் பக்தர்கள் உள்ளே இருப்பதற்கு அனுமதி இல்லை. கொரோனா தடுப்பு விதிமுறைகளான நுழைவாயிலில் கைகளை சுகாதார முறையில் சுத்தப்படுத்துதல், முகக் கவசம் முழுமையாக அணிதல் மற்றும் சமூக இடைவெளி கண்டிப்பாக அனுசரிக்கப் படவேண்டும்.*

## நினைவில் நின்றவர். . .

*பகவானது சீரிய பக்தரும், உசிலம்பட்டி - வளையப்பட்டி ரமணாலாயம் டிரஸ்ட் ஸ்தாபகருமான திரு. பரமன் அவர்கள் 2.3.2021 செவ்வாய்க்கிழமை அன்று காலையில் பகவான் திருவடி அடைந்தார். தமது ஸ்தாபனத்தின் மூலம் பல்வேறு சத்சங்கங்களையும் அன்னதானங்களையும் 20 வருடங்களாக நடத்தி அப்பகுதி மக்களுக்கு இடையே ரமண பக்தியினை ஏற்படுத்தி வந்தார். உடல்நிலை காரணமாக தனது 86-ஆவது வயதில் பகவானடி சேர்ந்தார். ரமணோதயம் சார்பாக அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

*அக்டோபர் 2020 ரமணோதயம் இதழில், இவர் ரமணாலயம் ஏன், எவ்வாறு, எதற்குத் துவக்கினார் என்பதைப் பற்றி 'ஸ்ரீரமண மையங்களை நோக்கி...' கட்டுரையில் விரிவாக விவரித்துள்ளோம்.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், | | |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | ......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | ......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை***, *ரமணாலயம்* | ........ | 9444261296 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | ........ | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | ........ | 23716495 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | ........ | 9444172623 |
| ***புதுச்சேரி*** *ரமண கேந்திரம்* | ........ | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | ...... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | ........ | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | ........ | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | ........ | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | .......... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | ........ | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | ........ | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | ........ | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | ....... | 9787180757 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | ......... | 9443070924 |
| ***திண்டுக்கல்*** ரமண பாரதி | ......... | 9994042091 |
| ***பூண்டி*** மாரியப்பன் | ......... | 9486576687 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



19/3/2021 ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் நடைபெற்ற ஸ்ரீவித்யா ஹோமம்
மற்றும் 11/3/2021 அன்று நடைபெற்ற சிவராத்திரி விழா



Registered with the Registrar of Newspaper for India RNI No.: TNTAM/2001/5542

